# விளையும் பயிர்



## கி.வா. ஜகந்நாதன்

கண்ணன் வெளியீடு

உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com

# விளையும் பயிர்

உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com

| வ. எண் | பொருளடக்கம் | பக்க எண் |
|---|---|---|
| 1 | குழந்தை காந்தி | 1 |
| 2 | நம்முடைய நேரு | 10 |
| 3 | தமிழ்த் தாத்தா | 17 |
| 4 | குழந்தை ரவி | 26 |
| 5 | ராஜேன் பாபு | 34 |
| 6 | பாரதியார் | 41 |
| 7 | மௌலானா ஆஸாத் | 50 |

# விளையும் பயிர்



## கி.வா. ஜகந்நாதன்

கலைமகள் காரியாலயம்

[உரிமை பதிவு]

மயிலாப்பூர் : சென்னை-4

www.worldtamilacademy.com

# பதிப்புரை

காலத்தில் இப்படி விளங்கியது என்று சொல்வது வாழ்க்கை வரலாறு. பிற்காலத்தில் புகழ்பெற்று வாழ்ந்த பெரியவர்களின் குழந்தைப் பருவ நிகழ்ச்சிகளை அவர்களுடைய வரலாறுகளிலிருந்து அறிகிறோம். ‘விளையும் பயிர் முளையிலே தெரியும்’ என்ற பழமொழியை உண்மைப்படுத்தும் நிகழ்ச்சிகளைப் பெரும்பாலும் அந்த வரலாறுகளிலே காணலாம்.

சில பெரியவர்களின் இளமைப் பருவ நிகழ்ச்சிகளை விரித்து எழுதினால் குழந்தைகள் படித்து இன்புறுவார்கள் என்ற எண்ணத்தோடு மகாத்மா காந்தியடிகள் முதலிய ஏழு பேர்களின் வரலாற்றிலிருந்து அவற்றைத் தொகுத்தேன். ஒவ்வொரு பெரியவரைப்பற்றியும் ஒவ்வொரு கட்டுரையாகக் ‘கண்ண’னில் எழுதி வந்தேன். குழந்தைகளுக்குச் சுவையூட்டும் வகையில் தெளிவான சின்னஞ் சிறு வாக்கியங்களில் எழுதவேண்டும் என்பது என் விருப்பம். ஒருவாறு அந்த விருப்பத்தை நிறைவேற்ற முயன்றேன். அப்படி எழுதியவற்றின் தொகுப்பே இந்தப் புத்தகம்.

‘கண்ண’னில் வரும்போது குறிப்பிட்ட அளவுக்குள் அடங்க வேண்டியிருந்தமையால், கிடைக்கும் செய்திகளையெல்லாம் பயன்படுத்திக்கொண்டு விரிவாக எழுத முடியவில்லை. அப்படி எழுதினால் ஒவ்வொருவரையும் பற்றி ஒவ்வொரு புத்தகமே எழுதிவிடலாம்.

நாளைக்குப் பெரியவர்களாகும்போது, இதைப் படிக்கும் குழந்தைகளில் எத்தனை பேர் நாடு புகழ வாழும் பெரியவர்கள் ஆகிறார்களோ! அவர்கள் தங்கள் இளம் பருவ அநுபவங்களை நினைக்கும்போது, இந்தப் புத்தகத்தைப் படித்த நினைவும் வரலாம் அல்லவா? வரும் என்று நினைத்து மகிழ்ச்சி அடைகிறேன். பெரியவர்களாகிய ★நீங்கள், “அப்படியே ஆகுக!” என்று வாழ்த்துங்கள்.

கி. வா. ஜகந்நாதன்

www.worldtamilacademy.com

# 1. குழந்தை காந்தி

இந்தியா என்றால் உலகத்தில் அங்கங்கே உள்ள ஜனங்களுக்கு இரண்டு பொருள்கள் ஞாபகத்துக்கு வரும். இமயமலை இருக்கிறதே, அது ஒன்று. அதைப்போல உயர்ந்த மலை உலகத்திலே வேறு எங்கும் இல்லை. மற்றொன்று மகாத்மா காந்தியின் பெயர். ஒருகால் இமயமலை சில பேருக்குத் தெரியாமல் இருக்கலாம். ஆனால் **மகாத்மா காந்தியைத்** தெரியாத தேசமே இல்லை.

நம் இந்தியாப் படத்தில் இடப்பக்கத்தில் கிட்டத்தட்டப் பாதியில் காதுபோல ஒரு பாகம் இருப்பதைப் பார்க்கலாம். அந்த இடத்துக்குக் கூர்ஜரம் என்று பெயர். அங்கே வாழ்பவர்களைக் குஜராத்திகள் என்று சொல்வார்கள். அவர்கள் தாய்மொழி குஜராத்தி. அந்தத் தேசத்தில் பிறந்தவர் காந்தி மகாத்மா. போர் பந்தர் என்ற ஊரில் 1869-ஆம் வருஷம் அக்டோபர் மாதம் இரண்டாம் தேதி அவர் பிறந்தார். அவர் தகப்பனார் பெயர் கபாகாந்தி. அம்மா புத்லிபாய், காந்தி என்பது குடும்பப் பெயர். மகாத்மாகாந்தியின் முழுப்பெயர் மோகன்தாஸ் கரம்சந்த் காந்தி என்பது. அதையே மோ.க. காந்தி என்று அவர் கையெழுத்துப் போடுவார். அவர் தமிழிலும் மோ.க.காந்தி என்று கையெழுத்துப்போட்டுக் கொடுத்திருக்கிறார்.

காந்தியின் அம்மா மிகவும் நல்லவள், தெய்வபக்தி உள்ளவள். நம்முடைய புராணங்களிலே உள்ள பெரியவர்களின் கதைகளெல்லாம் அவளுக்குத் தெரியும். ஒவ்வொரு நாளும் சூரியனைக் கண்ணால் கண்டபிறகே சாப்பிடுவது என்று ஒரு விரதம் உண்டு.

புத்லிபாய் அந்த விரதத்தை அனுஷ்டித்தாள். அந்த மாதம் வானத்தில் எப்போதும் மப்பும் மந்தாரமுமாகவே இருக்கும். சூரியன் தன் முகத்தைச் சுலபத்தில் காட்டமாட்டான்.

காந்தியின் அம்மாவோ சூரியனைக் கண்டால் ஒழியச் சாப்பிடுவதில்லை. காந்தி அம்மாவிடம், "நீ சாப்பிடாமல் இருக்கிறாயே; அம்மா! சூரியன் இன்னும் முகத்தைக் காட்டவில்லையே" என்று வருத்தத்தோடு சொல்வார். "கடவுளுக்கு நான் உணவு கொள்ள வேண்டுமென்று திருவுள்ளம் இருந்தால் சூரிய தரிசனம் கிடைக்கும். அது கிடைக்காதவரையில், நான் சாப்பிடாமல் இருப்பதே கடவுளுடைய சித்தம் என்றுதான் நினைப்பேன்" என்பாள். என்ன பக்தி பார்த்தீர்களா? தம்முடைய தாய் பட்டினி நீங்கிச் சாப்பிட வேண்டும் என்று காந்திக்கு ஆவலாக இருக்கும். அடிக்கடி வானத்தைப் பார்த்துக்கொண்டே இருப்பார். சூரியன் தோன்றினால் ஓட்ட ஓட்டமாக அம்மாவிடம் ஓடி, "அம்மா, அம்மா, அதோ சூரியன்; பார்; பார்த்துவிட்டுச் சாப்பிடு" என்று கூறுவார்.

காந்தியின் தகப்பனார் ராஜகோட் என்ற ஊருக்கு உத்தியோகமாகப் போனார். காந்தியும் அங்கே சென்றார். அங்கே ஒரு சின்னப் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து படித்தார். அவருக்கு விஷமம் பண்ணவே தெரியாது. மற்றப் பையன்களோடு சேர்ந்து கூடிக் குதித்து விளையாடுவதும் இல்லை. வீட்டிலிருந்து நேரே பள்ளிக்கூடம் போவார். அங்கே பாடம் உண்டு; அவர் உண்டு. பிறகு பள்ளிக்கூடம் விட்டால் ஒரே ஓட்டத்தில் வீடு வந்து சேர்வார். சில காலங்கழித்துச் சின்னப் பள்ளிக்கூடத்தை விட்டுப் பெரிய பள்ளிக்கூடத்தில் சேர்ந்து படித்தார்.

அங்கே படித்துக்கொண்டிருந்தபோது ஒரு நாள் பள்ளிக்கூடத்துக்கு இன்ஸ்பெக்டர் துரை வந்தார். அப்போது காந்தி ஆறாவது வகுப்பில் வாசித்துக்கொண்டிருந்தார். இன்ஸ்பெக்டர் துரை அந்த வகுப்புக்கு வந்து இங்கிலீஷில் பரீட்சை செய்ய ஆரம்பித்தார். காந்தி இங்கிலீஷில் சுமார் தான். இன்ஸ்பெக்டர் ஐந்து இங்கிலீஷ் வார்த்தைகளைச் சொல்லி அவற்றை எழுதச் சொன்னார். வாத்தியாரும் அங்கே இருந்தார். காந்தி ஒரு வார்த்தையைத் தப்பாக எழுதினார். அதை வாத்தியார் கவனித்தார். அவரை எப்படித் திருத்துவது? பக்கத்தில் இருந்த பையன் சரியாக எழுதியிருந்தான். வாத்தியாருக்கு ஒரு யோசனை தோன்றியது. தம் கால் பூட்ஸால் காந்தியின் காலை அழுத்தினார்; கண்களால் பக்கத்துப் பையனைக் கவனிக்கும்படி ஜாடை செய்தார். காந்தி அவர் ஜாடையைப் புரிந்துகொள்ளவே இல்லை. பக்கத்துப் பையனைப் பார்த்துக் காப்பி அடிக்கலாம் என்ற விஷயமே அவர் மனசுக்குத் தோன்றவில்லை. வாத்தியாரிடம் மற்றவைகளையெல்லாம் கற்றுக்கொண்டார். ஆனால் காப்பி அடிக்கும் விதத்தை அவர் கற்றுக்கொள்ளவில்லை.

குஜராத்தி பாஷையில் சிரவண நாடகம் என்ற ஒரு புத்தகம் உண்டு. சிரவணன் என்ற சிறுவன் தன் தாய் தகப்பனிடம் மிகவும் அன்பாக நடந்த கதையைச் சொல்வது அது. அவனுடைய அம்மா அப்பா மிகவும் கிழவர்கள். ஒவ்வொருவரையும் ஒவ்வொரு கூடையில் வைத்துக் காவடி கட்டி, இரண்டு புறத்திலும் அந்தக்கூடைகளைக் கட்டிச் சுமந்து கொண்டே போவானாம். ஒரு நாள் ஒரு காட்டில் அவன் தங்கினான். அம்மா அப்பாவுக்கு மிகவும் தாகமாக இருந்தது. பக்கத்தில் இருந்த குளத்தில்

தண்ணீர் மொண்டு கொண்டு வரப் போனான். குறுகின வாயுள்ள பாத்திரத்தில் தண்ணீர் மொள்ளும் போது கொடக் கொடக் என்ற சத்தம் கேட்டது.

அப்போது அந்தக் காட்டில் வேட்டையாட வந்திருந்த தசரத மகாராஜாவின் காதில் இந்தச் சத்தம் விழுந்தது. ராமருடைய தகப்பனாராகிய தசரத மகாராஜாதாம் அவர். அங்கே ஏதோ காட்டு மிருகம் தண்ணீர் குடிக்கிறதென்று எண்ணிக் கொண்டு, அந்தப் பக்கமாக ஓர் அம்பை விட்டார். அது சிரவணன் மேல் பாய்ந்தது. “ஐயோ!” என்று கத்திக்கொண்டு விழுந்தான்.

தசரதர் ஓடிப் போய்ப் பார்த்தார். சிரவணன் ரத்த வெள்ளத்தில் மூழ்கிக் கிடக்கிறான். தசரதர் அழுதார். “ஐயோ, தெரியாமல் செய்துவிட்டேனே!” என்று கதறினார். உயிர் போகிற தறுவாயில் இருந்தான் சிரவணன். அப்போதுகூட அவன் தன் தாய்தந்தையை மறக்கவில்லை. “மகாராஜா, என் அம்மா அப்பா தாகத்தோடு துன்புறுவார்கள். நீர் அவர்களிடம் வேகமாய்ப் போய்த் தண்ணீர் கொடும்” என்று சொல்லி உயிர் விட்டான். தசரதர் அந்தக் கிழவர்களிடம் போய் நடந்ததைச் சொன்னார். அவர்கள் கதறு கதறென்று கதறினார்கள்.

அந்தச் சிரவணன் கதையைக் காந்தி வாசித்தார். சிரவணனுடைய தாய் தகப்பனாரின் துக்கம் அவர் உள்ளத்தைக் கனியச் செய்தது. சிரவணனைப் போல அம்மா அப்பாவிடம் அன்பாக இருக்க வேண்டும் என்று உறுதி செய்துகொண்டார்.

அவர் ஒரு சின்ன நாடகத்தைப் படித்துப்பார்த்து ஈடுபட்டார்.

மற்றொரு நாடகத்தைக் கண்ணால் பார்த்து அதில் உள்ளத்தைப் பறிகொடுத்தார். அவர் வாழ்வு முழுவதும் சத்தியத்தைக் கடைப்பிடித்து வாழ்வதற்கு அந்த நாடகமே தூண்டுகோலாக இருந்தது. நாடு, மனைவி, மக்கள், பதவி எல்லாம் இழந்தாலும் சத்தியத்தை விடாமல் காப்பாற்றின ஹரிச்சந்திரன் கதையைச் சொல்லும் அரிச்சந்திர நாடகந்தான் அது. அந்த நாடகத்தைக் காந்தி மிகவும் ஆவலோடு பார்த்தார். அரிச்சந்திரன் பட்ட துன்பங்களை எண்ணும்போது அவரை அறியாமலே கண்ணீர் வரும். பெரியவரான பிறகுகூட அந்த நாடகத்தைப் படிக்கும்போது அவர் கண்ணீர் விடுவாராம்.

காந்திக்குப் பள்ளிக்கூடத்தில் ஒரு தோழன் ஏற்பட்டான். அவருடைய அண்ணாவுக்கும் அவன் தோழன். முதலில் அண்ணாவுக்குச் சிநேகிதன் ஆகிப் பிறகு தம்பிக்கும் தோழன் ஆனான். அவன் பீடி சிகரெட்டுப் பிடிப்பான்; மாமிசம் சாப்பிடுவான்; ஏமாற்றுவான்; திருடுவான். இன்னும் என்ன வேண்டும்? பலசாலி. “மாமிசம் சாப்பிட்டால் தான் உடம்பு பலமடையும். எந்தக் காரியத்தையும் செய்யலாம். ‘நே’ என்று இருக்கிறயே; நீயும் மாமிசம் தின்றால் குண்டுக் ‘காளை மாதிரி கொழுத்துப் போவாய். வெள்ளைக்காரர்கள் பலசாலியாக இருக்கிறார்களேஃ ஏன் தெரியுமா? மாமிசத்தைக் கண்டால் ஹுஹும் என்று ஓடுவதில்லை; வயிறு நிரம்பச் சாப்பிடுவார்கள். அதனால் தான்

அவர்கள் இந்தியாவையே ஆளுகிறார்கள். இந்த ஊரில் யார்தாம் மாமிசம் சாப்பிடவில்லை? நீ என்னவோ பெரிய மனிதர்களெல்லாம் சுத்த வைஷ்ணவர்கள் என்று நினைத்துக்கொண்டிருக்கிறாய்! எனக்குத் தெரியும்,

தம்பி, அவர்கள் ரகசியமெல்லாம். சாராயமும் மாமிசமும் அருந்தாத பெரிய மநுஷர் ஒருவரைக் காட்டு, பார்க்கலாம். நான் காதை அறுத்துக் கொள்கிறேன். எல்லோரும் மறைவாகச் செய்கிறார்கள். நாமும் அப்படிச் செய்யலாமே!" என்று காந்திக்கு அவன் உபதேசம் செய்தான். காந்தி மாமிச வாசனையே காணாத குடும்பத்தில் பிறந்தவர். ஆதலால் அவருக்கு மாமிசம் என்றாலே இயற்கையாக ஓர் அருவருப்பு இருந்தது. ஆனால் அந்தத் தோழன் படிப்படியாக உருவேற்றி வந்தான். காந்தி அவன் பேச்சில் மயங்கினார்.

ஒருநாள் வெகுதூரமான தனி இடத்துக்கு அவரைத் தோழன் அழைத்துச் சென்றான். மாமிச உணவை முதல் முதலாக அன்று காந்தி புசித்தார். அதை அவர் உண்பதற்குள் போதும் போதுமென்றாகிவிட்டது; அவ்வளவு அருவருப்பு! வாந்தியெடுக்க வந்தது. அன்று இரவு முழுதும் அவருக்குத் தூக்கமே இல்லை. அவர் வயிற்றுக்குள்ளே இருந்து ஆடு ஒன்று, "அம்மே, அம்மே" என்று கத்துவதுபோல இருந்தது.

சில நாட்கள் இந்தக் கெட்ட பழக்கம் காந்தியிடம் இருந்தது.

அவர் புலால் உண்பது தாய் தகப்பனாருக்குத் தெரியாது. வெளிப்படையாகத் தின்னத் தைரியம் இல்லை. சில சமயங்களில் பொய் வேறு சொல்லவேண்டி வந்தது. சிரவணனுடைய கதையும் அரிச்சந்திரனுடைய கதையும் அவர் மனசில் பதிந்திருந்தன அல்லவா? தாய் தகப்பனாருக்குத் தெரியாமல் ஒரு காரியத்தைச் செய்வதும், அதற்காகச் சில பொய் சொல்வதும் அவருக்குப் பிடிக்கவில்லை. மிகவும் வேதனை அடைந்தார். ஆகவே மாமிசம் உண்பதை விட்டுவிட்டார்.

காந்தியின் சொந்தக்காரர் ஒருவர் அவருக்குச் சிகரெட் குடிக்கும் பழக்கத்தைக் கற்றுக்கொடுத்தார். சிகரெட் வாங்கப் பணம் வேண்டுமே! சிகரெட்டுக்காகவென்று அப்பாவிடம் சொல்லிப் பணம் வாங்க முடியுமா? ஆகையால் திருட ஆரம்பித்தார். வீட்டு வேலைக்காரர்கள் பணத்தைத் திருடிச் சிகரெட் வாங்கிக் குடித்தார். அவருக்கு அவருடைய தமையனே கூட்டாளி. தமையனார் கையில் தங்கக் காப்புப் போட்டிருந்தார். அதில் சிறிது வெட்டி விற்று, அந்தப் பணத்துக்குச் சிகரெட் வாங்கிப் பிடித்தார்கள்; பழைய கடனையும் தீர்த்தார்கள். காந்தியின் மனசு அதைப் பொறுக்கவில்லை. "நமக்கு வேண்டியதையெல்லாம் வாங்கித் தந்து நம்மைக் காப்பாற்றுகிறார் அப்பா. அவருக்கு வஞ்சகம் செய்து, இந்தக் காப்பை வெட்டினோமே! என்ன கொடுமை!" என்று வருந்தினார். இதை அப்பாவிடம் சொல்லி மன்னிப்புக் கேட்கவேண்டும் என்று தீர்மானித்தார். எப்படிச் சொல்வது? நேரிலே சொல்லத் தைரியம் வரவில்லை. ஒரு கடிதத்தில் தாம் செய்த பிழையை எழுதி, என்ன தண்டனை செய்தாலும் ஏற்றுக்கொள்வதாகக் குறிப்பிட்டிருந்தார். "இனிமேல் இப்படிச் செய்யமாட்டேன்" என்று உறுதியும் கூறியிருந்தார்.

அப்பா அப்போது நோய்வாய்ப் பட்டிருந்தார். படுக்கையில் படுத்தபடி இருந்தார். காந்தி கடிதத்தைக் கட்டிலின் மேல் வைத்து விட்டுக் கீழே உட்கார்ந்துகொண்டார். 'அப்பா, என்ன செய்தாலும் சரி; ஏற்றுக்கொள்வதுதான் நம் பாவத்துக்குப் பரிகாரம்' என்ற நினைப்போடு உட்கார்ந்திருந்தார்.

தந்தை எழுந்து உட்கார்ந்து கடிதத்தை எடுத்துப் படித்தார்.

அவர் முகம் சிவக்கவில்லை. கண்களில் தீப்பொறி பறக்கவில்லை. தலையில் அடித்துக்கொள்ளவில்லை. இரையவில்லை. ஆனால் அவர் கண்களிலிருந்து தாரை தாரையாக நீர் ஒழுகியது. அவர் உள்ளம் எவ்வளவு வேதனைப் பட்டிருக்க வேண்டும் என்பதைக் காந்தி சிந்தித்துப் பார்த்தார். அவருக்கு அழுகை வந்துவிட்டது. தந்தை கடிதத்தைக் கிழித்தெறிந்துவிட்டு மீண்டும் படுத்துக்கொண்டார். ஒரு வார்த்தையும் பேசவில்லை. பேசாவிட்டாலும் அவர் கண்ணீர் காந்தியின் உள்ளத்தைச் சுட்டது; அவருடைய அழுக்கை அலம்பியது. அதுமுதல் திருட்டு, புகைபிடிப்பது முதலிய கெட்ட பழக்கங்கள் அவரிடமிருந்து ஓடியே போய்விட்டன.

காந்தி மெட்ரிகுலேஷனில் தேர்ச்சி பெற்றார். பிறகு பாவ நகரில் உள்ள காலேஜில் ஒரு வருஷம் படித்தார். அப்பால் சீமைக்குப் போய்ப் படித்தால் அவர் முன்னுக்கு வருவார் என்று வேண்டியவர்கள் சொன்னார்கள். காந்திக்கும் அது விருப்பமாகவே இருந்தது. அவருடைய தகப்பனார் அப்போது இறந்துவிட்டார். காந்தி சீமைக்குப் போவது அவர் தாய்க்குப் பிடிக்கவில்லை. அங்கே போனால் கெட்ட பழக்கங்கள் வந்துவிடுமென்ற பயம் அவளுக்கு. மதுபானம், மாமிச உணவு, ஒழுக்கப் பிசகு எல்லாம் ஏற்பட்டுவிடும் என்ற எண்ணத்தால், சீமைக்குப் போகவேண்டாம் என்று சொன்னாள். ஆனால் உறவினர்கள் வற்புறுத்தினார்கள். காந்திக்கும் ஆசையாக இருந்தது. கடைசியில், “மதுவைத் தொடமாட்டேன்; மாமிசம் உண்ணுவதில்லை; கெட்ட நடத்தையில் ஈடுபடமாட்டேன்” என்று தாய்க்குச் சத்தியம் செய்து கொடுத்தார் காந்தி.

அதன் பிறகு சீமைக்குப் போக உத்தரவு கொடுத்தாள் தாய்.

சீமைக்குப் போய்ப் படித்தார் காந்தி. தாயிடம் சத்தியம் செய்தபடி நடந்துகொண்டார். அது தவறும்படியான சந்தர்ப்பங்கள் வந்தன. ஆனாலும் காந்தி அப்போதும் மனம் தளராமல் சத்தியத்தைக் காப்பாற்றினார். லண்டனில் பாரிஸ்டருக்குப் படித்தார். இந்தியாவுக்கு வந்து சில காலம் பாரிஸ்டராக இருந்தார். பிறகு தென் ஆப்ரிக்கா சென்று பாரிஸ்டராக இருந்தார். அங்கே இந்தியர்கள் படும் துன்பத்தைப் போக்கப் போராடினார். அப்போது தான் காந்தியின் உண்மையான பெருமை தெரிந்தது. தென் ஆப்ரிக்காவில் அவர் செய்த காரியங்களும், பிறகு இந்தியாவுக்கு வந்து இந்தியாவின் அடிமை வாழ்வைப் போக்கச் செய்த காரியங்களும் பாரதம், ராமாயணம் போலப் பெரிய பெரிய கதையாகச் சொல்ல வேண்டியவை.

இன்று பாரத நாடு சுதந்தர நாடாக இருப்பது காந்தி மகாத்மாவினால் தான். அவருடைய பெயரைச் சொல்லிக்கொண்டு நாம் பெருமை அடைகிறோம். 1948-ஆம் வருஷம் ஜனவரி மாதம் 30-ந் தேதி ஒரு வெறியனுடைய துப்பாக்கிக்கு அவர் இரையானார். மரணத்துக்கு அஞ்சாமல் வாழ்ந்தவர் அவர். அவர் வாழ்ந்த நாட்டில் வாழ நாம் கொடுத்து வைத்திருக்கிறோம். அதைக் காட்டிலும் பெரிய சிறப்பு வேறு ஒன்றும் இல்லை.



# 2. நம்முடைய நேரு

எங்கள் பாட்டி எனக்கு அடிக்கடி கதை சொல்லுவாள். ராமன் கதை, கிருஷ்ணன் கதை, எல்லாம் சொல்வாள். "தசரத மகாராஜாவுக்கு மணிமணியாகக் குழந்தைகள் பிறந்தார்கள். ரத்னம் போல் ராமன் பிறந்தான்" என்று கதை சொல்வாள். கிருஷ்ணன் கதையைச் சொன்னாலும், "அவன் மணிப்பயல்" என்று சொல்வாள்.

"அதென்ன பாட்டி, மணிப்பயல், ரத்னம் போலப் பிறந்தவன் என்கிறாயே; ஏன் அப்படிச் சொல்கிறாய்?" என்று கேட்டேன்.

"ரத்னம் அதிக விலையுள்ளது, சுலபமாகக் கிடைக்காது. அது மாதிரியே ராமனைப் போலவும் கிருஷ்ணனைப் போலவும் குழந்தைகள் பிறப்பது அருமை" என்று பாட்டி சொன்னாள்.

பாட்டி சொன்னது எனக்கு நன்றாக ஞாபகத்தில் இருக்கிறது. அதுவும், நம்முடைய பாரத தேசத்துக்கே ஒரு ரத்னம் போல ஒருவர் இருக்கிறார் என்று தெரிந்தபோது பாட்டி சொன்ன கதையை மறக்க முடியுமா?

ரத்னம்போல இருக்கிறார் என்றேனே, அவர் பெயரே ரத்னந்தான். நாம் ரத்னம் என்று சொல்லுகிறோம்; அதே பேரை ஹிந்தியில் ஜவஹர் என்று சொல்வார்கள்.

நான் யாரைப்பற்றிச் சொல்கிறேனென்று நீங்கள் தெரிந்து கொண்டிருப்பீர்களே! ஆம், **ஜவஹர்லால் நேருவைத்தான்.** நம்முடைய தேசத்துக்கே ரத்னம் போன்றவர் அவர் என்று எல்லோரும் சொல்லுகிறார்கள்.

ஜவஹர்லால் நேருவின் அப்பா மோதிலால் நேரு. மோதி என்றால் முத்து. முத்தின் வயிற்றில் ரத்னம் பிறந்தது போல மோதிலால் நேருவுக்கு

ஜவஹர்லால் நேரு முதல் பிள்ளையாகப் பிறந்தார். அலகாபாத் என்ற நகரத்தில் மோதிலால் பெரிய வக்கீல்; நல்ல பணக்காரர். வெள்ளைக்காரரைப்போல உடுப்புப் போடுவார். அவர்களைப்போல இருப்பது தான் நாகரிகம் என்று அந்தக் காலத்தில் பெரிய மனிதர்கள் நினைத்தார்கள்.

ஜவஹர்லால் நேரு 1887-ஆம் வருஷம் பிறந்தவர். முதல் பிள்ளை, செல்லப்பிள்ளை. அவருக்கு என்ன குறைவு? விளையாட்டுச் சாமானுக்குக் குறைவா? உடைக்குக் குறைவா? உணவுக்குக் குறைவா? ஒரு குறைவும் இல்லாமல் சந்தோஷமாக வளர்ந்து வந்தார். ஒரு நாள் குழந்தை ஜவஹர் அப்பாவின் அறைக்குள் போனார். அப்பா எங்கேயோ வெளியிலே போயிருந்தார். மேஜை மேல் இரண்டு பௌண்டன் பேனா இருப்பதைக் குழந்தை ஜவஹர் பார்த்தார். அதில் ஒன்றை எடுத்துக்கொண்டு வந்துவிட்டார். அப்பா வெளியிலிருந்து வந்தார். மேஜையைப் பார்த்தார். ஒரு பேனாவைக் காணவில்லை. அந்தக் காலத்தில் பௌண்டன் பேனா, சுலபமாகக் கிடைப்பதில்லை.



மோதிலால் நேரு மகா கோபக்காரர். “என் பேனா! எங்கே?” என்று இரைச்சல் போட்டார். ஜவஹர் ஒன்றும் பேசாமல் பேனாவை ஒளித்து வைத்துவிட்டார். கடைசியில் பேனாவை அப்பா கண்டுபிடித்தார். ஜவஹர்மேல் கடுமையான கோபம்

வந்தது. அவரை இழுத்து வந்து அடித்தார். செல்லப்பிள்ளையாக வளர்ந்தாலும், பாவம், பேனாவை ஒளித்ததற்காக அடிபட்டார்! பிறகு அவருடைய அம்மா வந்து அவரை அழைத்துப்போய்ச் சமாதானம் செய்தார். இது அவர் ஐந்து வயசுக் குழந்தையாக இருந்தபோது நடந்தது.

குழந்தைக்கு வீட்டிலே வாத்தியாரை வைத்துப்பாடம் சொல்லித் தந்தார்கள். அந்த வாத்தியார் மிகவும் நல்லவர். நல்ல கதைகளையெல்லாம் சொல்வார். குதிரை வீரர்களின் கதைகளைச் சொல்வார். அந்தக் கதைகளைக் கேட்கும்போதெல்லாம், ‘நாமும் ஒரு குதிரை வீரன் ஆகவேண்டும்’ என்று ஜவஹருக்கு ஆசை ஏற்படும்.

பெரிய குதிரையின் மேல் டக் டக், டக் டக், டக் டக், டக் டக் என்று சவாரி பண்ணுவதாக நினைத்துக் கொள்வார். அவர் நினைத்தது வீண்போகவில்லை. அப்பா ஜவஹருக்கு ஒரு சின்னக் குதிரையையே வாங்கிக்கொடுத்தார். உண்மையான உயிருள்ள குதிரை. ஜவஹருக்கு உண்டான ஆனந்தம் சொல்லி முடியாது. அதன்மேல் ஏறி ஓட்டக் கற்றுக்கொண்டார்.

ஊரெல்லாம் பிரமிக்கும்படி குதிரையை வெகு வேகமாக ஓட்டவேண்டுமென்று ஜவஹர்லாலுக்கு ஆசை. அடிக்கடி அதை ஓட்டிக்கொண்டு சவாரி செய்து ஆனந்தப்படுவார். ஒரு நாள் அவருக்கு அதிக உற்சாகம் உண்டாகிவிட்டது. குதிரைமேல் ஏறிச் சவாரி செய்ய ஆரம்பித்தார். அதை விரட்டி ஓட்டினார். குதிரை நாலுகால் பாய்ச்சலில் ஓடியது. ஓடுகிற வேகத்தில் ஜவஹர்லால் தொபுகடீர் என்று கீழே விழுந்தார். நல்ல வேளை; காயம் ஒன்றும் இல்லை. ஓட்டம் பிடித்த குதிரை வீட்டுக்குப் போய் நின்றது.

வீட்டில் உள்ளவர்கள் குதிரையைப் பார்த்தார்கள். ஜவஹர்லாலை அதன் மேல் காணவில்லை. அம்மா வந்து பார்த்தாள். அப்பா வந்து பார்த்தார். “நான் அவரைத் தள்ளிவிட்டு வந்தேன்” என்று குதிரை சொல்லுமா?

குழந்தையைத் தேடிக்கொண்டு போனார்கள். கண்டுபிடித்தார்கள்.

காயம் ஒன்றும் இல்லாமல் தலையைக் குனிந்து கொண்டு நின்றிருந்தார் ஜவஹர். “கீழே விழுந்தும் காயம் படவில்லையே! நீ வீரன் தான்” என்று அப்பா கொண்டாடினார்.



அதுமுதல் குதிரைச் சவாரியை அவர் விட்டுவிட்டார் என்று தானே நீங்கள் எண்ணுகிறீர்கள்? இல்லவே இல்லை. அந்தக் குதிரையிடம் இன்னும் அதிகப் பிரியத்தோடு பழகினார். மேலும் மேலும் குதிரைச் சவாரி செய்தார். அறுபது வயசு நடக்கும் இப்போதுகூட நம்முடைய ஜவஹர்லாலுக்குக் குதிரை ஏறிச்சவாரி பண்ணுவதென்றால் பிரியம் அதிகம்.

ஜவஹர்லால் மிகவும் குறும்புக்காரர். ஹோலிப் பண்டிகை என்று ஒரு பண்டிகையை வடதேசத்தில் கொண்டாடுவார்கள். அப்போது பீச்சாங்குழலில் வர்ணத் தண்ணீரை விட்டுச் சிநேகிதர்களின் மேல் பீச்சுவது வழக்கம். ஜவஹர்லால் சிறு பையனாக இருந்தாலும் பெரியவர்களின் மேல் வர்ண ஜலத்தைப் பீச்சுவார். அவர்களைத் துரத்தி அடித்து முகத்திலும் ஆடைகளிலும் ஒரே வர்ணமாக ஆக்கிவிடுவார். அலகாபாத்தில் அவர்கள் பெரிய மாளிகையில் வசித்தார்கள். அதற்கு ஆனந்த பவனம் என்று பெயர். அதில் நீச்சல் அடிப்பதற்காக ஒரு குளம் இருக்கிறது. ஜவஹர்லால் நேரு அதில் நீச்சல் அடிப்பார். அவருடைய தகப்பனாருக்கு வேண்டியவர்கள் கூட அந்தக் குளத்துக்கு வந்து நீச்சலடித்துப் பொழுது போக்குவார்கள். ஜவஹர் அவர்களிடம் குறும்பு பண்ணுவார். அசந்து மறந்து நின்றால் தண்ணீருக்குள் தள்ளிவிடுவார். காலை இழுத்து விட்டுத் தண்ணீருக்குள் மூழ்கி மறைந்து போவார்.

அப்பா மோதிலால் நேருவுக்குப் பல கனவான்கள் சிநேகம். அவர்களை அடிக்கடி அழைத்து விருந்து நடத்துவார். அப்போதெல்லாம் வெள்ளைக்காரரைப்போல விருந்தில் மதுவை அருந்துவதுண்டு. ஒரு நாள் தகப்பனாரும் அவர் சிநேகிதர்களும் விருந்து உண்டு கொண்டிருந்தார்கள். ஜவஹர்லால் மறைவாக நின்று பார்த்துக்கொண்டிருந்தார். அவரை மோதிலால் நேரு பார்த்துவிட்டார். உடனே எடுத்துத் தம்மடியில் வைத்துக்கொண்டார். ஜவஹருக்கு விஷமம் ஒன்றும் செய்ய முடியவில்லை. கண்களைக் கொட்டாமல் எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டிருந்தார். கிண்ணங்களில் மேல்நாட்டு மதுவை ஊற்றி

அவர்கள் உண்டார்கள். அந்த மது செக்கச் செவேலென்று இருந்தது,

ஜவஹர் மெதுவாக நழுவினார். அம்மாவிடம் ஓடிப்போய், "அம்மா, அம்மா! அப்பாவும் அவர் சிநேகிதர்களும் ரத்தத்தைக் குடிக்கிறார்கள்" என்று படபடப்புடன் சொன்னார். அவருக்கு அது மதுவென்று தெரியாது.

ஜவஹருக்குப் பத்து வயசு நடந்தபோது அவருக்கு ஒரு தங்கை பிறந்தாள். குழந்தை பிறந்த செய்தியை ஜவஹருக்கு டாக்டர் சொன்னார். "நல்ல வேளை! தங்கையாகப் பிறந்தாள். தம்பியாகப் பிறந்தால் உன் சொத்தில் பங்கு கேட்பான்" என்று அவர் வேடிக்கையாகச் சொன்னார். ஜவஹர்லாலுக்கு அது வேடிக்கையாகப் படவில்லை. "அதென்ன அப்படிச் சொல்லுகிறார்? என் பொருள்களைத் தம்பிக்குக் கொடுக்க மனசு இல்லாதவனா நான்?" என்று எண்ணி வருத்தப்பட்டார். டாக்டர்மேல் கோபம் கோபமாக வந்தது. உண்மையில் ஜவஹரைப்போல ஏழைகளுக்கு இரங்கும் பெரியவர்கள் மிகவும் குறைவு. பெரிய அரண்மனையாக விளங்கிய ஆனந்த பவனத்தைப் பிற்காலத்தில் அப்பாவும் பிள்ளையும் சேர்ந்து காங்கிரஸ்க்குக் கொடுத்துவிட்டார்கள். "சுயராஜ்ய பவனம்" என்று அதற்குப் புதிய பேர் உண்டாயிற்று.

தம் குமாரர் ஜவஹர்லால் நேருவுக்கு ஒரு வெள்ளைக்காரரைக் கொண்டு பாடம் சொல்லிவைத்தார் தகப்பனார். புரூக்ஸ் என்பது அவர் பெயர். அவரிடம் ஜவஹர் நன்றாகக் கல்வி கற்றார். பிறகு அவரை அவருடைய தகப்பனார் இங்கிலாந்துக்கு அழைத்துச் சென்றார். அங்கே ஒரு பள்ளிக்கூடத்தில் சேர்ந்து வாசித்தார் ஜவஹர். காலேஜ் படிப்புப் படித்துப் பிறகு வக்கீல் படிப்பும் படித்தார்.

அந்தக் காலம் முதலே இந்தியாவுக்குச் சுதந்தரம் வேண்டும் என்ற ஆசை அவருக்கு இருந்தது. இந்தியா சுதந்தரம் பெற வேலை செய்யவேண்டும் என்ற எண்ணம் நாளுக்கு நாள் வளர்ந்தது. படிப்பையெல்லாம் முடித்துக்கொண்டு இந்தியா வந்தார். மகாத்மா காந்தியிடம் அன்பு பூண்டார். அவருடைய பிள்ளையைப்போலப் பழகினார். தேசத்துக்காகத் தொண்டு புரிந்து பல வருஷங்கள் சிறைக்குச் சென்றார்.

இந்தியா சுதந்தரம் அடைந்துவிட்டது. மகாத்மா காந்தி இப்போது இல்லை. ஆனாலும் ஜவஹர்லால் நேரு இருக்கிறார் என்ற தைரியம் நமக்கு இருக்கிறது. குழந்தைகள் என்றால் அவருக்கு மிகவும் பிரியம். இந்தியாவின் பிரதம மந்திரியாக இருக்கும் அவருக்கு எவ்வளவோ வேலை. ஆனாலும் தம் இரண்டு பேரர்களுடன் விளையாடுவதில் அவருக்கு ஆனந்தம். அவர் சொற்படி நாமெல்லாம் செய்தால் தான் நமக்கும் அவரிடத்தில் பிரியம் இருப்பது உண்மையாகும்.

# 3. தமிழ்த் தாத்தா



**யா**ர் வீட்டிலாவது பழைய நகையோ, பாத்திரமோ இருந்தால் அதை லேசில் அழிக்க மனசு வராது.

"எங்கள் தாத்தாவுக்குத் தாத்தா காலம் முதல் இது எங்கள் வீட்டில் இருக்கிறது; ஆகிவந்தது" என்று பெருமையாகச் சொல்லிக்கொள்வார்கள். இப்படியே, "இந்த நிலம் நூறு வருஷத்துக்கு மேலாக எங்கள் குடும்பத்தில் இருக்கிறது" என்று சொல்லுவார்கள். நூறு வருஷம் கிடக்கட்டும். இருநூறு வருஷம், முந்நூறு வருஷம், நானூறு வருஷமாக இருந்து வரும் அருமையான சொத்து நமக்குக் கிடைத்தால் எவ்வளவு சந்தோஷமாக இருக்கும்! இதெல்லாம் நூற்றுக்கணக்கு. இரண்டாயிரம் வருஷகாலமாக இருந்த சொத்து மறைந்துபோய்த் திடீரென்று கிடைக்கிறது. அப்போது நாம் எப்படித் துள்ளிக் குதிப்போம்.

தமிழ்த்தாத்தா மகாமகோபாத்தியாய **டாக்டர் உ. வே. சாமிநாதையர்** அப்படித்தான் துள்ளிக் குதித்தார். தமிழ் நாட்டையே சந்தோஷமாகத் துள்ளிக் குதிக்கச்செய்தார். இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன் இருந்த வித்வான்கள் எத்தனையோ பாடல்களைப் பாடினார்கள். அவற்றையெல்லாம் சேர்த்துப் புத்தகமாக்கி வைத்தார்கள். பழைய காலத்தில் அச்சுப் புத்தகம் இல்லை. பனையோலையில் எழுதிச் சுவடியாகச் சேர்த்து வைப்பார்கள். இரண்டாயிரம் வருஷங்களுக்கு முன் தமிழ்நாட்டில் தமிழ்ச் சங்கம் ஒன்று இருந்தது. அதில் பல புலவர்கள் இருந்தார்கள். அவர்கள் பாடிய பாடல்களெல்லாம் ஏட்டுச் சுவடிகளில் இருந்தன.

அந்தச் சுவடிகளைப் பாதுகாப்பவர் இல்லாமல், எங்கோ மூலையில் கிடந்தன. அந்தப் பாடல்களைப் படிக்கிறவர்களும் இல்லை. அதனால் அந்தக் கவிகளினால் தெளிவாகும் செய்திகள் தெரியாமல் போயின. இருக்கும் இடம் தெரியாமல் அந்தத் தமிழ் நூல்கள் மறைந்திருந்தன. அந்தப் பாடல்களைத் தமிழ்த் தாத்தா கண்டுபிடித்தார். புதையல் எடுப்பது போல எடுத்து, சுத்தமாக்கி அச்சிட்டுத்தந்தார். அந்தப் புத்தகங்களைப் படித்துப் பார்த்த போது எத்தனை புதிய விஷயங்கள் தெரிந்தன! புதிய விஷயங்கள். என்று சொல்லக்கூடாது; பழைய விஷயங்களே. பல காலமாகத் தெரியாமல் மறைந்திருந்ததனால், புதுமையாக இருந்தன.

தமிழ்நாட்டில் அந்தக் காலத்தில் இருந்த அரசர்களைப்பற்றி அந்த நூல்கள் பல கதைகளைச் சொல்லுகின்றன. பல புலவர்களைப் பற்றித் தெரிந்துகொள்ளுகிறோம். ஜனங்கள் எப்படி வாழ்ந்தார்கள் என்று அறிகிறோம். பழைய ஊர்கள், பழைய சபைகள், பழைய நாகரிகம்,

இன்னும் எத்தனை எத்தனையோ விஷயங்களை நாம் தெரிந்துகொள்ளுகிறோம்.

1855-ஆம் வருஷம் பிறந்து 88-வருஷ காலம் தமிழ்த் தாத்தா வாழ்ந்தார். பெரிய கவிஞராகிய மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களிடம் பாடம் கேட்டார். அவரும் மகாவித்வான் ஆனார். கும்பகோணம் காலேஜிலும் சென்னைப் பிரஸிடென்ஸி காலேஜிலும் தமிழ் ஆசிரியராக இருந்தார். எத்தனையோ பேர்களுக்கு வீட்டிலும் பாடம் சொல்லிக்கொடுத்திருக்கிறார்.

அவர் முதல் முதலில் சீவகசிந்தாமணி என்ற புத்தகத்தை அச்சிட்டார். பத்துப் பாட்டு, புறநானூறு முதலிய அருமையான நூல்களை அவர் பதிப்பித்திருக்கிறார். அவருக்கு இங்கிலீஷ் தெரியாது. ஆனாலும் மேல் நாட்டில் பல பெரிய ஆராய்ச்சிக்காரர்களெல்லாம் அவர் செய்த ஆராய்ச்சியைப் பாராட்டினார்கள். நூறு புத்தகங்களுக்கு மேல் வெளியிட்டிருக்கிறார்.

அவர் கதைகளையும் கட்டுரைகளையும் எழுதியிருக்கிறார். இவ்வளவு படித்த அவர் உங்களுக்குக் கூடப் புரியும்படி தெளிவான நடையில் எழுதியிருக்கிறார். நடந்த விஷயங்களைக் கதைபோலச் சொல்வதில் அவர் மிகவும் கெட்டிக்காரர். பண்டிதர்களுக்கெல்லாம் பெரிய பண்டிதர். ஆனாலும் குழந்தைகளுக்கும் விளங்கும்படி பேசுவார்; எழுதுவார்.

அவர் தம்முடைய சரித்திரத்தை விரிவாக எழுதியிருக்கிறார். முழுதும் எழுதி முடிக்கவில்லை. அதற்குள், அவர் வாழ்வு முடிந்தது.

தமிழ்த்தாத்தாவுக்கு ஒரு தாத்தா இருந்தார். அவர்களுடைய ஊர் தஞ்சாவூர் ஜில்லாவில் உள்ள உத்தமதானபுரம்.

தமிழ்த் தாத்தாவுக்குப் பிற்காலத்தில் எத்தனையோ பட்டங்கள் கிடைத்தன. திருவாவடுதுறை என்ற ஊரில் உள்ள சைவமடத்தின் தலைவர் மகாவித்வான் என்று ஒரு பட்டம் அளித்திருக்கிறார். அரசாங்கத்தார் மகாமகோபாத்தியாயர் என்ற பட்டம் அளித்தார்கள். சென்னை யூனிவர்ஸிட்டியில் டாக்டர் என்ற பட்டம் கிடைத்தது. இன்னும் திராவிட வித்தியாபூஷணம், தாட்சிணாத்திய கலாநிதி என்றெல்லாம் வேறு பட்டங்களும் கிடைத்தன.

இவைகளெல்லாம் இருக்கட்டும். மற்றொரு பட்டம் அவருக்குக் கிடைத்தது. அந்தப் பட்டம் என்ன தெரியுமா? "கத்திரிக்காய்த் தொகையல்" அவருக்கு ஒரு தாத்தா இருந்தார் என்றேனே, அந்தத் தாத்தாவால் வந்த பட்டம் அது.

ஆறு வயசுக் குழந்தையாக இருந்தார் சாமிநாதையர். அவர் தகப்பனார் வெளியூருக்குச் சென்றிருந்தார். வீட்டில் அவருடைய தாயார் இருந்தார். அவர் தாத்தாவாகிய கிழவருக்குச் சாப்பாட்டில் அதிகப் பிரியம். "ஒருவரும் நான் சொல்கிறபடி நடக்கிறதில்லை" என்று சொல்லிக்கொண்டே இருப்பார். அவருக்குப் பிரியமான சமையலைச் செய்ய வேண்டுமென்று சாமிநாதையருடைய தாயார் எண்ணுவார். தம் குமாரரைக் கூப்பிட்டு, "உன் தாத்தாவிடம் போய் என்ன சமையல் பண்ண வேண்டுமென்று கேட்டுக்கொண்டுவா" என்று சொல்லி அனுப்புவார். குழந்தை சாமிநாதையர் தாத்தாவிடம் போவார்; "என்ன சமையல் செய்ய வேண்டும்?" என்று கேட்பார்.

தாத்தா உடனே பதில் சொல்ல மாட்டார்; கனைத்துக்கொள்வார்.

மேலும் கீழும் பார்ப்பார்; "சமையலா?" என்பார். சிறிது நேரம் கழித்து, "மண்ணாங்கட்டி, தெருப்புழுதி" என்று வெறுப்பாகச் சொல்வார்.

அதைக் கேட்ட பேரர் உடனே அம்மாவிடம் ஓடுவார். "மண்ணாங்கட்டி, தெருப்புழுதி" என்று சொல்வார்.

"என்னடா இது? சமையல் என்ன செய்கிறதென்று கேட்டால், எதையோ உளறுகிறாயே!" என்று தாயார் கேட்பார்.

"தாத்தா அப்படித்தான் சொன்னார்" என்பார் குழந்தை. "சரி, சரி, மறுபடியும் போய்க் கேட்டு விட்டு வா" என்று அனுப்புவார்.

பேரர் தாத்தாவிடம் மறுபடியும் போவார். "என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்பார். நிதானமாக, "கத்திரிக்காய் இருக்கிறதா?" என்று கேட்பார்.

மறுபடியும் சாமிநாதையர் அம்மாவிடம் போவார். "கத்திரிக்காய் இருக்கிறதா?" என்ற கேள்வியை ஒப்பிப்பார். "இருக்கிறது" என்று தாயார் சொல்வார். அங்கிருந்து தாத்தாவிடம் வந்து, "இருக்கிறது" என்பார்.

"சரி. அந்தக் கத்திரிக்காயைச் சுட்டுவிட்டு... என்ன, தெரிகிறதா?" என்று தாத்தா ஆரம்பிப்பார்.

"ஹூம்" என்று கேட்பார் பேரர்.

"அதைச் சுட்டுவிட்டு அம்மியில் வைத்து......என்ன, கேட்கிறதா?"

"ஹூம்"

"கத்திரிக்காயை அம்மியில் வைத்து ஓட்டி ஓட்டி ஓட்டி ஓட்டி .....'

ஓட்டி ஓட்டி அரைப்பதை அவர் ஓட்டிக்கொண்டே போவார்.

அதை அப்படியே அம்மாவிடம் போய்ச் சொல்வார் குழந்தை.

மறுபடியும் தாத்தா கூப்பிடுவார். கத்திரிக்காய்த் துவையலை எப்படிச் செய்ய வேண்டும் என்பதைச் சாங்கோபாங்கமாகச் சொல்வார். இந்த மாதிரி கத்திரிக்காய்த் துவையல் விஷயத்தைத் தாத்தாவிடம் கேட்டு அம்மாவுக்குச் சொல்வதால் எல்லாரும் அவரைக் "கத்திரிக்காய்த் துவையல்" என்று அழைக்க ஆரம்பித்தார்கள்.

தமிழ்த் தாத்தாவின் தகப்பனார் சங்கீத வித்வான். அதனால் சாமிநாதையரும் சங்கீதம் கற்றுக்கொண்டார். சின்ன வயசிலேயே கவிபாடுவார். அங்கங்கே உள்ள தமிழ்ப் புலவர்களிடம் அவர் தமிழ் படித்தார். அந்தப் புலவர்களில் ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு நூல் தெரியும். அவரவர்களுக்குத் தெரிந்தவற்றைக் கற்றுக்கொண்டார். கடைசியில் மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை என்னும் பெரிய கவிஞரிடம் பாடம் கேட்க ஆரம்பித்தார்.

தமிழ்த் தாத்தா

முதலில் அந்தக் கவிஞர் சாமிநாதையருக்கு நேரே பாடம் சொல்லவில்லை. அவரிடம் படித்து வந்த மாணாக்கர் ஒருவர் பாடம் சொன்னார். சாமிநாதையருக்கோ நேரே பிள்ளையவர்களிடம் பாடம் கேட்க வேண்டுமென்ற ஆசை. புதிதாக வந்த அவர் எப்படித் தம் ஆசையைத் தெரிவிப்பது? ஒரு வழியும் தெரியவில்லை. மனசுக்குள்ளேயே அந்த ஆசையை வைத்துப் புழுங்கிக் கொண்டிருந்தார்.

மாயூரத்தில் மீனாட்சிசுந்தரம் பிள்ளை தம்முடைய வீட்டின் பின்புறத்தில் ஒரு தோட்டத்தை அமைத்தார். பெரிய மரங்களை மண்ணோடு பறித்துக்கொண்டு வந்து வைக்கச் செய்தார். அழகான மலரையும்

பசுமையான மரங்களையும் பார்ப்பதில் அவருக்கு விருப்பம் அதிகம். கவிஞர்களுக்கே இயற்கை அழகில் ஈடுபடும் இயல்பு இருக்கும்.

வைத்திருந்த மரங்களெல்லாம் தளிர்த்துப் பூத்துச் சோலையாக விளங்கவேண்டும் என்ற ஆசை மீனாட்சிசுந்தரம் பிள்ளைக்கு இருந்தது. மரங்களில் புதிய தளிர் வந்திருக்கிறதா என்று பார்ப்பார். ஒவ்வொரு நாளும் காலையிலும் மாலையிலும் வீட்டுக்குப் பின்புறம் சென்று மரங்களைக் கவனமாக ஆராய்வார். எங்காவது ஒரு மரத்தில் புதிய தளிர் தளிர்த்திருந்தால் அவர் மனசிலும் மகிழ்ச்சி தளிர் விடும். இப்படித் தினந்தோறும் அவர் பார்த்து வருவதைச் சாமிநாதையர் கவனித்தார். மறுநாள் சீக்கிரமே எழுந்தார். நேரே வீட்டின் பின்புறம் சென்று எந்த எந்த மரங்களில் புதிய தளிர்கள் தோன்றியிருக்கின்றன என்று பார்த்துத் தெரிந்து கொண்டு போனார். சிறிது நேரம் கழித்துக் கவிஞர் அங்கே வந்தார். தளிர்களைப் பார்க்கத் தொடங்கினார். பார்த்துக்கொண்டிருக்கையில் சாமிநாதையர் அங்கே வந்தார். தம்முடைய ஆசிரியரை மிகவும் மரியாதையோடு அணுகினார். தாமும் தளிரைப் பார்ப்பது போலப் பார்த்து, "அதோ, அங்கே ஒரு தளிர்" என்றார். ஆசிரியர் ஆவலோடு, "எங்கே?" என்று சொல்லி அதைப் பார்த்தார். மறுபடியும், "இதோ இங்கே ஒன்று" என்றார். அதையும் ஆசிரியர் பார்த்து மகிழ்ந்தார்.

இந்தக் காரியத்தால், சாமிநாதையருக்கு ஆசிரியரோடு நேரில் பேசிப்பழகும் சந்தர்ப்பம் கிடைத்தது. புதிய தளிர்களைக்காணக் காண மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் மனசு மிகவும் சந்தோஷம் அடைந்தது. அவற்றைப் பார்த்துச் சொன்ன சாமிநாதையரிடத்திலும் அன்பு உண்டாயிற்று.

அத்தகைய சமயத்தில் சாமிநாதையர், “நேரிலே பாடம் கேட்கவேண்டும் என்ற ஆவல் இருக்கிறது” என்று ஆசிரியரிடம் விண்ணப்பித்துக் கொண்டார். மீனாட்சிசுந்தரம் பிள்ளை அப்படியே பாடம் சொல்லத் தொடங்கினார்.

மீனாட்சிசுந்தரம் பிள்ளைக்குக் கவி பாடுவதென்றால் தண்ணீர் பட்ட பாடு. அன்பர்களுடன் பேசிக்கொண்டே கவிகளையும் சொல்வார். சொல்லச் சொல்லச் சாமிநாதையர் ஏட்டில் எழுதிக் கொள்வார். இப்படிப் பல புத்தகங்களை அவர் எழுதியிருக்கிறார்.

மீனாட்சிசுந்தரம் பிள்ளை பல மாணாக்கர்களுக்குப் பாடம் சொன்னார். அந்தக் காலத்தில் இருந்த எல்லா நூல்களையும் நன்றாகப் பாடம் சொல்லுவார். ஆனால் அவருக்குக்கூடத், தெரியாத புத்தகங்களை நாம் இப்போது படிக்கிறோம். அதற்குச் சாமிநாதையரே காரணம்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இருந்த புலவர்கள் பாடிய நூல்கள் அந்தக் காலத்தில் எங்கோ கிடந்தன. கும்பகோணம் காலேஜில் ஆசிரியராக இருந்தபோது சாமிநாதையர் அந்த நூல்களை ஆராய்ச்சி செய்யத் தொடங்கினார். ஊர் ஊராகச் சென்று ஏட்டுச்சுவடிகளைத் தேடினார். ஏட்டுச்சுவடிகளில் உள்ளதைப் படிப்பது மிகவும் கஷ்டம். எழுதினவர்கள் செய்த தப்புகளெல்லாம் அவற்றில் இருக்கும். நூல்களோ மிகப் பழங்காலத்து நூல்கள். இப்படி இருந்தும் ஏட்டுச்சுவடிகளைப் படித்து, பழைய பாடல்களின் அர்த்தத்தைத் தெரிந்து கொண்டார் தமிழ்த்தாத்தா; பிறகு அவற்றை அழகாக அச்சிட்டார்.

தமிழ்ப் படித்துக் கரையேற வேண்டுமானால் அவர் பதிப்பித்த நூல்களைப் படிக்காமல் இருக்க முடியாது. தமிழ்நாட்டின் பழைய

சரித்திரத்தைத் தெரிந்து கொள்ள வேண்டுமானாலும் அவர் அளித்த நூல்களைப் படிக்க வேண்டும்.

நீங்கள் இன்னும் சில வருஷங்கள் ஆனபிறகு அவர் வெளியிட்ட நூல்களைப் படிக்கத்தான் போகிறீர்கள். அப்போது அவருடைய பெருமை உங்களுக்கு நன்றாகத் தெரியவரும்.



# 4. குழந்தை ரவி



உங்களுக்கு ஞாபகசக்தி இருக்கிறதோ? அப்படியானால் நான் ஒரு பாட்டைச் சொல்கிறேன்; அதை எங்கேயாவது கேட்டிருக்கிறீர்களா? நன்றாக யோசித்துச் சொல்லுங்கள்

"ஜன கண மன அதி நாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா"

ஹோ, ஹோ, ஹோ - நீங்கள் கண்டுபிடித்துவிட்டீர்கள்.

ரேடியோவிலே கேட்டது உங்களுக்கு ஞாபகத்துக்கு வருகிறது. சினிமாவிலே கேட்டதும் நினைவுக்கு வருகிறது. இன்னும் எங்கெங்கோ கேட்டிருக்கிறீர்கள். இந்தப் பாட்டுச் சுதந்தரக் குடியரசாகிய நம்முடைய பாரத நாட்டின் கீதம்; தேசீய கீதம் என்று சொல்லுவார்கள்.

இதைப் பாடினவர் **இரவீந்திரநாத் தாகூர்** என்பவர். அவர் இப்போது இல்லை. நீண்ட தாடியோடு இருக்கும் அவர் படத்தை நீங்கள் எந்தப் புத்தகத்திலாவது பார்த்திருக்கலாம். அவர் பெரிய கவிஞர். அழகாகக் கவி பாடுவார். மேல் நாட்டுக்காரர்கள் அவர் பாட்டை மெச்சி நோபல் பரிசு என்ற பெரிய பரிசை வழங்கினார்கள்.

நீண்ட தாடிக்காரராகிய அவர் பிறக்கும் போதே தாடிக்கார ராகிவிட்டாரா, என்ன? இல்லை, இல்லை. அவரும் உங்களைப் போலக் குழந்தையாக இருந்தார். மாணாக்கனாக இருந்தார். அப்போதெல்லாம் அவர் மிகவும் சாது. பள்ளிக்கூடத்துக்குப் போகிறதென்றாலே அவருக்கு வேப்பங்காயாக இருக்கும்.

பெரிய பணக்காரக் குடும்பத்திலே பிறந்தவர் ரவீந்திரர். கல்கத்தாவில் அவர்களுக்குப் பிரம்மாண்டமான வீடு இருந்தது. அவருக்குப் பல தமையன்மார். வீடு முழுவதும் சொந்தக்காரர்களும் வேலைக்காரர்களும் நிறைய இருப்பார்கள். எப்போதும் ஜேஜே என்று இருக்கும் வீடு.

குழந்தை ரவிக்குக் கூட்டத்திலே இருப்பதென்றால் பிடிப்பதில்லை. தனியாகப் போய் உட்கார்ந்து கொள்ளுவார். என்ன என்னவோ யோசித்துக்கொண்டே இருப்பார். அவர்கள் வீட்டில் பழங்காலத்துப் பல்லக்கு ஒன்று இருந்தது. முன்பு அதன்மேல் பெரிய மனிதர்கள் ஏறிப் போவார்கள்.

'ஹம் ஹூம்' என்று சொல்லிக்கொண்டே வேலைக்காரர்கள் அதைத் தூக்கிக்கொண்டு போவார்கள். இப்போதோ அதன்மேல் யாரும் ஏறுவதே இல்லை. நல்ல நல்ல வண்டிகளெல்லாம் வந்துவிட்ட பிறகு பழைய பல்லக்கை யார் உபயோகிப்பார்கள்? அதில் யாராவது ஏறிச் சென்றாலும் ஜனங்கள் பார்த்துச் சிரிப்பார்கள்.

பழைய பல்லக்கை ஒரு மூலையிலே வைத்திருந்தார்கள். குழந்தை ரவி அதைக் கண்டார். அதன் மேல் அவருக்குப் பிரியம் உண்டாயிற்று. யாரும் தொந்தரவு பண்ணாமல் சுகமாக உட்காரலாம் என்று எண்ணினார்.

பல்லக்கிலே போய் உட்கார்ந்தார். அவருக்குக் கரைகாணா ஆனந்தம் உண்டாயிற்று. பல்லக்கைத் தூக்க ஆள் இல்லை. அதில் அவர் ஏறிப் பிரயாணம் செய்ய முடியாது. ஆனாலும் அவருக்கு அதிக ஆனந்தம் உண்டாயிற்று. ஏன் தெரியுமா? அவர் அதைப் பல்லக்காகவே நினைக்கவில்லை, ஒரு பெரிய சமுத்திரம். அதன் நடுவிலே ஒரு சிறிய தீவு. அங்கே ஒரு வீரன் காவலிலிருந்து தப்பி ஓடிவந்துவிட்டான். யாருடைய தொந்தரவும் இல்லாமல் அந்தத் தீவிலே தனிக்காட்டு ராஜாவாக வாழ்கிறான். ரவி அந்த வீரனாக ஆகிவிடுகிறார். பல்லக்கே தீவாகிவிடும்

திடீரென்று அந்தத் தீவு மாறிவிடும். பல்லக்குத் தானாகவே பறக்க ஆரம்பித்துவிடும். நிஜமாக அல்ல. எல்லாம் மனசிலே நினைத்துக்கொள்கிறது தான். பல்லக்குப் போய்க்கொண்டே இருக்கும். கவி பல தேசங்களைக் கடந்து போவார். அவர் பாட புத்தகத்தில் என்ன என்னவோ தேசங்களைப்பற்றியெல்லாம் வாசித்திருந்தார். அந்தத் தேசங்களைப் பார்த்துக்கொண்டே அவர் பிரயாணம் செய்வார்.

அப்புறம் காடு வரும். காட்டிலே புலி வரும். குழந்தை ரவி சிறிது நடுங்குவார்.

இப்படியெல்லாம் மனசிலே கற்பனை செய்துகொள்வார் ரவி. பொழுதுபோனதே தெரியாமல் அந்தப் பழைய பல்லக்கில் அவர் மனம் போனபடியெல்லாம் பாவனை செய்வார்.

ரவியினிடம் ஒரு மரச் சிங்கம் இருந்தது. மரத்தினால் ஒரு கத்தியும் வைத்திருந்தார். நவராத்திரி வந்தது. சிங்கத்தைப் பலி கொடுத்தால் அற்புதமான சக்தி கிடைக்கும் என்று யாரோ பேசிக்கொண்டார்கள். ரவியின் காதில் அது விழுந்தது. அந்த அற்புத சக்தியை அடைய அவர் நிச்சயித்தார். சிங்கத்தைப் பிடித்துக்கொண்டார். மரச் சிங்கந்தான்; ‘பொம்மைச் சிங்கம். ஆனாலும் அவர் மனசுக்குள்ளே நினைத்தால் நிஜச்சிங்கம் ஆகிவிடுமே. அதை மரக்கத்தியினால், லொட்டு லொட்டு என்று அடிப்பார். கத்தியிலே கூர்மை ஏது? ஆகையால் லொட்டு லொட்டு என்றுதான் சத்தம் கேட்கும். பலிகொடுத்தால் மந்திரம் சொல்ல வேண்டாமா? அவரே அந்த மந்திரத்தைப் புதிதாகக் கட்டினார்.

உல்குட்டுல்குட்

ட்யாம் குங்குட்

ஆக்ரோட் பாக்ரோட்

கட் கட் கடாஸ்

பட் பட் படாஸ்

இதுதான் அவர் கட்டின மந்திரம். இதற்கு என்ன அர்த்தம் என்று எனக்குத் தெரியாது. ரவிக்குக்கூடத் தெரியாது.

ரவீந்திரர் வீடு மிகவும் பெரியதென்று முன்பே சொன்னேன். அந்த வீட்டில் சில சமயங்களில் ராத்திரியில் நாடகம் நடைபெறும். நாடகக்காரர்கள் வந்து திரை கட்டி நாடகம் ஆடுவார்கள். ராத்திரி நெடுநேரம் நாடகம் நடக்கும். பெரியவர்களெல்லாம் போய்ப் பார்ப்பார்கள். அப்போது நடுநடுவே ரூபாயை மேடை மேல் எறிவார்கள். அவர்களுக்கு நாடகத்தினால் ஏற்பட்ட சந்தோஷத்துக்கு அது அடையாளம். நடிகர்கள் அதை எடுத்துக் கொள்வார்கள்.

ஒரு நாள் குழந்தை ரவியும் நாடகத்துக்குப் போயிருந்தார். அவர் கையிலே ரூபாய்களைக் கொடுத்து நடுநடுவே ஒவ்வொரு ரூபாயாகப் போடச் சொன்னார்கள். ரவிக்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது. ரூபாயைக் கொஞ்ச நாழிகைக்கு ஒரு தரம் போட்டுக்கொண்டே வந்தார். குழந்தைதானே? எவ்வளவு நேரம் விழித்துக்கொண்டே இருப்பார்? கண் இமைகளைத் தூக்கம் இழுத்தது தூங்கி விழுந்தார். அதைப் பார்த்து அவரை அப்படியே தூக்கிக்கொண்டு போய்ப் படுக்கையிலே விட்டுவிட்டார்கள். மறுநாள் எழுந்து பார்த்தால் அவர் படுக்கையிலே இருக்கிறார். “நான் இங்கே எப்படி வந்தேன்? நாடகமல்லவா பார்த்தேன்? ரூபாயைப் போட்டேனே! எல்லா ரூபாயையும் போடவில்லையே!” என்று அம்மாவிடம் கேட்டார். “நீ நாடகம் பார்த்த அழகு போதும்! நீதான் தலையை அசைத்து அசைத்துத் தூங்கி விழுந்தாயே! உன்னைத் தூக்கிக்கொண்டு வந்து படுக்கையில் விட்டேன்” என்றாள் அம்மா. “அத்தனை பேரும் பார்க்கவா?” என்று ரவி கேட்டார். அம்மா, “ஆம்” என்றாள். ரவிக்கு ஒரே வெட்கமாகப் போய்விட்டது.

“என்னைத் தூங்குமூஞ்சி என்று அத்தனை பேரும் தெரிந்து கொண்டார்களே!” என்று வருத்தப்பட்டு முகத்தைக் கவிழ்த்துக்கொண்டார்.

ரவிக்குப் பல அண்ணன்மார், பல மன்னிகள். ஒரு மன்னி சீன தேசத்துக் கரிக்குருவி ஒன்றை வளர்த்து வந்தாள். உல்லாசமாகப் பறந்து விளையாடுகிற பறவையைக் கூட்டில் அடைத்தது ரவிக்குப் பிடிக்கவில்லை. அது சத்தம் போட்டால் அவருக்கு வேதனையாக இருக்கும்; வயிற்றை என்னவோ பண்ணும்.

மன்னிக்கு அணில் பிள்ளைகளை வளர்க்கவேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது. அதற்கு ஏற்பாடு செய்து கொண்டிருந்தாள். ரவி அவளிடம் போய், “மன்னி, மன்னி, நீ தப்புக்காரியம் செய்கிறாய்” என்றார். “என்ன தப்பு?” என்று கேட்டாள். குழந்தையைப் போல ஆனந்தமாக விளையாடும் அணிலைப் பார். அது கட்டுக் காவல் இல்லாமல் விளையாடுவது எவ்வளவு அழகாக இருக்கிறது! அதைப் பிடித்து வந்து சிறையில் அடைப்பது போல அடைக்கலாமா? அடைத்தால் அது சந்தோஷமாக இருக்குமா?” என்றார். மன்னிக்கு இதெல்லாம் காதில் விழவில்லை. “போடா பைத்தியக்காரா மகா பெரியவன் போலப் பேச வந்துவிட்டான்” என்று சொல்லிவிட்டாள்.

இரண்டு அணில்களைப் பிடித்து வந்து மன்னி வளர்க்க ஆரம்பித்தாள். ரவீந்திரருக்கு மனசு மிகவும் கஷ்டப்பட்டது. அவரையே ஜெயிலில் பிடித்துப் போட்டால் எப்படி இருக்குமோ, அப்படி அவர் சங்கடப்பட்டார். ஆகையால் அவர் சமயம் பார்த்து ஒருவருக்கும் தெரியாமல் அந்த அணில்களை எடுத்து வெளியிலே விட்டார். என்ன வந்தாலும் வரட்டும் என்ற துணிவோடேதான் அப்படிச் செய்தார்.

அப்போது அவர் மனசிலிருந்து ஏதோ பெரிய பாரம் குறைந்தது போல் இருந்தது.

விஷயம் மன்னிக்குத் தெரிந்தது. ரவியை வைதாள். அதை அவர் பெரிதாக எண்ணவில்லை. அந்த வசவு அன்றோடு போயிற்று. ஆனால் சிறைப்பட்ட அணில் பிள்ளைகளோ விடுதலையடைந்து ஆனந்தமாகத் துள்ளிக் குதித்தன. அதைப் பார்த்துப் பார்த்து அவர் இன்பம் அடைந்தார்.

சின்ன வயசிலேயே ரவீந்திரர் சொந்தமாகக் கவிதை பாடினார். அவருக்கு ஒரு நாள் வேடிக்கையாக ஓர் எண்ணம் உண்டாயிற்று. தோட்டக்காரன் வர்ண வர்ணமான மலர்களைப் பறித்து வந்து பூக்கிண்ணங்களில் வைப்பான். கண்ணைப் பறிக்கும் அழகுள்ள பூக்கள், மென்மையான மலர்கள். இந்த மலர்களைப் பிழிந்து அந்தச் சாற்றிலே பேனாவைத் தோய்த்துக் கவிதை எழுதினால் மிகவும் நன்றாக இருக்குமோ என்ற எண்ணம் ரவிக்குத் தோன்றிற்று. பூக்களை எடுத்தார்; கசக்கிப் பிழிந்தார். அதிலிருந்து ஒரு துளிகூடச் சாறு கிடைக்கவில்லை. பிழிவதற்கு ஏதாவது யந்திரம் ஒன்றைச் செய்தால் என்ன என்று மற்றோர் யோசனை உண்டாயிற்று. அவருடைய அண்ணாவிடம் சொன்னார். இந்தப் பைத்தியக்கார யோசனையைக் கேட்ட அவருக்குச் சிரிப்பு வந்தது. ஆனாலும் குழந்தையின் ஆசையைக் கெடுக்கக்கூடாதென்று, ஒரு தச்சனைக் கூப்பிட்டார். மரத்தால் உரல் ஒன்றைப் பண்ணிக் கொடுக்கச் சொன்னார். ஒரு குழவியும் பண்ணச் சொன்னார்.

தச்சனிடம் அந்த இரண்டையும் பெற்ற ரவி தம் காரியத்தை ஆரம்பித்தார். பூவையெல்லாம் உரலில் கொட்டினார்.

குழவியினால் அரைத்தார். அப்போதும் மலரிலிருந்து ரஸம் கிடைக்கவில்லை அவருக்கே சலித்துப் போயிற்று. “இப்படியெல்லாம் அரைத்தால் மலரில் சாறு வராது” என்று தெரிந்து கொண்டார்.

ரவி மலரின் சாற்றிலே தோய்த்துக் கவிதை எழுதவில்லை. ஆனால் அவர் எழுதின கவிதைகள் தேனிலே தோய்த்து எழுதியவை போல இனிமையாக இருக்கும். சின்ன வயசிலேயே அவருக்குக் கற்பனையும் கவிபாடும் சக்தியும் இருந்தன.

அவரும் உங்களைப் போலக் குழந்தையாக இருந்தார், வேடிக்கை விளையாட்டெல்லாம் விளையாடினார் என்பதை நினைக்கும்போது, உங்களுக்கு ஆனந்தம் ஏற்படுகிறதல்லவா?,



# 5. ராஜேன்பாபு

‘தூங்குமூஞ்சி' என்று யாராவது உங்களைச் சொன்னால் உங்களுக்கு எவ்வளவு கோபம் வரும்? சுறுசுறுப்பாக இருந்தால் தான் படிப்பு வரும்; வேலைகளை நன்றாகச் செய்யலாம். “ஒருவர் தூங்கு மூஞ்சியாக இருந்தார்; ஆனால் அவர் படிப்பிலே புலி” என்று சொன்னால் நீங்கள் நம்பமாட்டீர்கள். “அது எப்படி? தூங்குமூஞ்சிக்கும் படிப்புக்கும் வெகு தூரமாயிற்றே!” என்று தான் சொல்லுவீர்கள். உண்மையில் அப்படி ஒருவர் இருக்கிறார். நம்முடைய பாரத தேசமாகிய குடியரசுக்கு இப்போது தலைவராக இருப்பவர் **ராஜேந்திரப் பிரசாத்** என்பது உங்களுக்குத் தெரியுமே. இதே ராஜேன்பாபு சின்ன வயசில் தூக்கத்திலே அதிகப் பிரியம் உள்ளவராக இருந்தாராம்; ஆனால் படிப்பிலே எல்லோரையும் விடக் கெட்டிக்காரர். அவர் எம்.ஏ., எம்.எல். என்ற பட்டங்களை எல்லாம் வாங்கியிருக்கிறார்.



“அவர் தூங்குமூஞ்சியாகவே இருந்து எப்படிக் கெட்டிக்காரர் ஆனார்?” என்று தெரிந்துகொள்ள உங்களுக்கு ஆசையாக இருக்கிறதல்லவா? இதோ சொல்லுகிறேன்.

ராஜேன் பாபு சின்னக் குழந்தையாக இருந்தபோது எப்போது வீட்டில் விளக்கு ஏற்றுகிறார்கள் என்பதே அவருக்குத் தெரியாது. அதற்குள் தூங்கிப் போய்விடுவார். அவருடைய தகப்பனார் பெரிய ஜமீன்தார். ராஜேன் பாபுவுக்கு இரண்டு அண்ணன் மார்; இரண்டு தமக்கைகள். இவரே கடைக்குட்டி. சூரியன் மலைவாயில் விழவேண்டியதுதான்; ராஜேன் பாபுவின் கண் இமைகள் மூடிக்கொள்ளும். அதற்கப்புறம் ராத்திரி என்ன நடந்தாலும் அவருக்குத் தெரியாது.

அவர்கள் வீட்டில் ஒரு வேலைக்கார அம்மாள் இருந்தாள். வேலைக்காரி ஆனாலும் சொந்தக்காரியைப் போலவே குடும்பத்தில் இருந்துவந்தாள். அவளை எல்லோரும் சித்தி' என்று அழைப்பார்கள். அந்தச் சித்தி, குழந்தை ராஜேன் பாபுவிடம் மிகவும் பிரியமாக இருப்பாள். அவர் தூங்கிப் போனாலும் எழுப்பிச் சாதம் போடுவாள். பாதித் தூக்கத்தோடே அவர் அவள் ஊட்டும் சாதத்தை ருசியே தெரியாமல் மடக்கு மடக்கென்று விழுங்குவார். நடுநடுவிலே தூங்கிவிழுவார். சித்தி, “இந்தா, அம்மாவுக்கு ஒரு பிடி; அண்ணாவுக்கு ஒரு பிடி” என்று சொல்லி ஊட்டுவாள்.

“என் கண்ணே இல்லையோ! காகா ஓஷ்! இதோ மைனாபார்; மைனாவுக்கு ஒரு பிடி; குயிலுக்கு ஒரு பிடி” என்று கொஞ்சிக் கொண்டே ஊட்டுவாள். காலையிலே எழுந்திருந்தால், ‘சித்தி மைனாவையும் குயிலையும் ராத்திரி கூப்பிட்டாள் போல் இருக்கிறதே’ என்று தோன்றும்.

அஸ்தமித்தவுடனே தூங்கிவிடும் பழக்கம் ராஜேன்பாபுவை நெடுநாள் விடவேயில்லை. அவர்மேல்படிப்புப் படிக்கிறபோது கூட ஏழரை மணிக்கே தூங்கிவிடுவார். இந்த வேடிக்கையைக் கேளுங்கள். அவருக்கு முப்பது வயசு நடந்து கொண்டிருந்தது. சட்டக் காலேஜில் அவர் புரபஸர். வேலை பார்த்து வந்தார். அதோடு வக்கீலாகவும் உத்தியோகம் பார்த்தார். காலை நேரத்தில் வழக்குக் கட்டுகளைப் படிப்பார். கோர்ட்டுக்குப் போவார். மத்தி - யானத்துக்குமேல் சட்டக்காலேஜுக்குப் போய்ப் பாடம் சொல்லுவார். சட்டப்பரீட்சையில் உயர்ந்தது எம்.எல் பரீட்சை. அதிலும் தேறிப்பட்டம் பெறவேண்டும் என்று ராஜேன் பாபு எண்ணினார். இத்தனை வேலைகளையும் வைத்துக்கொண்டு எப்படிப் படிக்கிறது?

சாயங்காலம் பரீட்சைப் பாடத்தைப் படிக்க ஆரம்பிப்பார். ஏழு மணிக்கே தூக்கம் கண்ணைச் சுற்றும், ஏழரை மணிக்குத் தூங்கிவிடுகிறவர் அல்லவா? ஒன்பது மணி வரையில் படித்தே தீர்வது என்று உறுதி செய்துகொண்டார். ஒரு நாள் படிக்க உட்கார்ந்தார். தூக்கம் வரும் போல இருந்தது. “சீ, சனியனே” என்று சொல்லி, நின்றபடியே படித்தார். அப்போதும் தூக்கம் கண் இமைகளை இழுத்தது. நடந்துகொண்டே படித்தால் தூக்கம் வராது என்று நினைத்தார். மெதுவாக உலாத்தினபடியே படித்துக் கொண்டிருந்தார். தூக்கம் அவரை அணுகியது. கண் சுழன்றது. புத்தகம் நழுவிக் கீழே விழுந்தது. அதுகூட அவருக்குத் தெரியவில்லை. அடுத்தபடி அவரே தடாலென்று கீழே விழுந்துவிட்டார். தலையில் காயம் பட்டுவிட்டது. அதுமுதல் எப்போது தூக்கம் வருகிறதோ அப்போது படிப்பதை நிறுத்திவிடுவார். நல்ல புத்திசாலி ஆகையால் கொஞ்ச நேரம்

www.worldtamilacademy.com

படித்தாலும் அது ஆழமாக அவர் மனத்தில் பதிந்தது. அவர் பரீட்சையில் தேறிவிட்டார்.

சின்னக் குழந்தையாக இருந்தபோது ராஜேன் பாபுவுக்கு வீட்டிலேயே ஒருவர் பாடம் சொல்லிக் கொடுத்தார். அவர் ஒரு மௌல்வி; முஸ்லிம் வாத்தியார். “எனக்கு அது தெரியும்; இது தெரியும்” என்று அவர் சொல்லிக் கொள்வார். ராஜேன்பாபுவுடைய சிற்றப்பா அந்த மௌல்வி இப்படியெல்லாம் சொல்வதைப் பார்த்து அவரைக் கிண்டல் பண்ணுவார்.

ஒரு நாள் சிற்றப்பா மௌல்வியை, “உங்களுக்குத் துப்பாக்கி சுடத்தெரியுமோ?” என்று கேட்டார். “துப்பாக்கியா! பீரங்கி கூடச் சுடத்தெரியும்” என்றார் மௌல்வி. “சரி, இன்றைக்கு நாம் வேட்டையாடப் போகலாம் வாருங்கள்” என்று சிற்றப்பா அவரை வெளியில் அழைத்துச்சென்றார். ராஜேன் பாபுவும் அவர்களுடன் வேடிக்கை பார்க்கப்போனார். ஓரிடத்தில் ஒரு மரத்தில் ஒரு கழுகு உட்கார்ந்துகொண்டிருந்தது. சிற்றப்பா, “அதோ அந்தக் கழுகைக் குறிபார்த்துச் சுடுங்கள்” என்று சொல்லித் தம்முடைய துப்பாக்கியை மௌல்வியின் கையில் கொடுத்தார். மௌல்வி அதை வாங்கிக்கொண்டார். கனைத்தார். குறிபார்த்தார். துப்பாக்கியில் உள்ள குதிரையை அழுத்தினார்; அவ்வளவு தான். டுமீல் என்ற துப்பாக்கி வெடியோடு தடாலென்ற ஓசை கேட்டது. கழுகு விழவில்லை. மௌல்வியே பின்பக்கமாக விழுந்துவிட்டார். கழுகு பறந்தோடிப் போயிற்று. துப்பாக்கிரவை வெடித்ததனால் பயந்து போய் மௌல்வி கீழே விழுந்து விட்டார். இதைப் பார்த்து ராஜேன் பாபுவும் சிற்றப்பாவும் இடிஇடியென்று சிரித்தார்கள்.

ராஜேன் பாபுவினிடம் அம்மாவுக்கு அதிகப் பிரியம். பஜனைப் பாட்டுகளும் ராமாயணம் முதலிய கதைகளும் அம்மா சொல்வாள். அவற்றைக் கவனமாகக் கேட்டுத் தெரிந்துகொள்வார்.

ராஜேன்பாபு பிகார் மாகாணக்காரர். அவர் கல்கத்தாவில் காலேஜ் படிப்புப் படித்தார். வங்காளிகள் படிப்பில் கெட்டிக்காரர்கள் என்றும், பிகாரிகளுக்கு அவ்வளவு புத்திக்கூர்மை இல்லையென்றும் காலேஜில் பேசிக்கொள்வார்கள். ராஜேன்பாபு முதல் முதலில் காலேஜில் வந்து சேரும்போது அங்கே ஆசிரியராக இருந்த ரசிக பாபு என்பவரைப் பார்த்தார். அந்த ஆசிரியர், "என்ன பையா, நீ பிகாரி; வங்காளிப் பையன்களுக்குச் சமானமாகப் படிக்க முடியுமா? படித்துப் பேர் வாங்கவேண்டும்" என்று சொன்னார்.

ராஜேன் பாபுவினுடைய மனத்தில் அவர் சொன்னது நன்றாகப் பதிந்துவிட்டது. காலேஜில் நடந்த எல்லாப் பரீட்சைகளிலும் அவரே முதல் மார்க்கு வாங்கினார். அதனால் அவருக்குப் பல பரிசுகளும் உபகாரச் சம்பளங்களும் கிடைத்தன.

எப்.ஏ.வகுப்பில் ராஜேன் பாபு படித்துக்கொண்டிருந்தார். ஒரு வெள்ளைக்காரர் புதிய பிரின்சிபாலாக வந்தார். எப். ஏ. பரீட்சைக்கு மாணாக்கர்களை அனுப்புவதற்கு முன், 'ஸெலக்ஷன்', பரீட்சை நடந்தது. ஒரு நாள் புதிய பிரின்ஸிபால் "இன்னார் இன்னார் பரீட்சைக்குப் போகலாம்" என்று தெரிவிக்க வந்தார். பையன்கள் ஆவலோடு அவர் படிக்கும் பேர்களைக் கேட்டார்கள். 'ஸெலக்ஷன் ஆனவர்களின் பெயர்களை ஒவ்வொன்றாகப் படித்தார் பிரின்ஸிபால். ராஜேன் பாபு கடைசிவரையில்

கவனித்தார். அவர் பெயர் வரவில்லை. ராஜேன் பாபு ஸெலஷன் பரீட்சையில் நன்றாக எழுதியிருந்தார். அவர் பெயர் வராமல் இருப்பதாவது? அவர் எழுந்து நின்றார். "ஸார், என் பெயரை வாசிக்கவில்லையே!" என்றார். பிரின்ஸிபால் ஏளனச் சிரிப்போடு, "ஸெலக்ஷனில் தேறினவர்களின் பெயர்களே இதில் இருக்கும்" என்றார். ராஜேன்பாபுவுக்கு ரோசம் தாங்கவில்லை. மற்றப் பையன்கள் கூட ஆச்சரியப்பட்டார்கள். "என் பெயர் இருக்கத்தான் வேண்டும்" என்று தைரியமாகச் சொன்னார் ராஜேந்திரர்.

பிரின்ஸிபால் கோபத்துடன், "நீ அடக்கமில்லாதவனாக இருக்கிறாய்" என்றார்.

"இல்லை; நான் நன்றாகப் பரீட்சை எழுதியிருக்கிறேன். என் பெயர் இல்லாமல் எப்படி இருக்கும்?"

"சண்டியாக இருக்கிறாயே; நீ வாயாடுவதனால் உனக்கு ஐந்து ரூபாய் அபராதம்!" என்றார் பிரின்ஸிபால்.

மாணாக்கர் விடவில்லை; "இல்லை; நன்றாகப் பாருங்கள். என் பெயர் இல்லாமல் போக நியாயம் இல்லை" என்று அழுத்தமாகச் சொன்னார்.

"என்னை எதிர்த்துப் பேசுகிறாய்; பத்து ரூபாய் அபராதம்."

"ஸார்,ஸார், நன்றாகப் பாருங்கள். நான் நிச்சயமாகச் செலக்ஷனில் தேறியிருப்பேன்."

பிரின்ஸிபால் பின்னும் கோபம் அடைந்தார். "பதினைந்து ரூபாய்", "இருபது ரூபாய்", "இருபத்தைந்து ரூபாய்" என்று அபராதத்தை ஏற்றிக் கொண்டே போனார். ராஜேந்திரரோ விட்டபாடில்லை. இந்தச் சங்கடமான சமயத்தில், பிரின்ஸிபாலுடன் வந்திருந்த குமாஸ்தா, ராஜேந்திரருக்குக்

கண்ணைக் காட்டினார். அப்போதுதான் அவர் பேசாமல் இருந்தார். பிரின்ஸிபால் கோபத்தோடு போனார்.

ராஜேந்திரர் பரீட்சைக்குப் போனார். பிரின்ஸிபால் அவரையும் பரீட்சைக்கு அனுப்பினார். அவர் அபராதமும் செலுத்தவில்லை. உண்மை என்னவென்றால் அவர் பெயரைச் சேர்க்க மறந்து போய் விட்டார்கள். அதைக் குமாஸ்தா கண்டுபிடித்துச் சரி செய்து விட்டார். பரீட்சையில் ராஜேன்பாபு முதல் மார்க்கு வாங்கினார்.

படிப்பிலே சூரப்புலி ராஜேந்திரர். சரித்திரத்தில் மாகாணத்திலே முதல்வராகத் தேர்ச்சி பெற்றார். ஆங்கிலம், தத்துவ சாஸ்திரம் இரண்டிலும் நிறைய மார்க்குகள் வாங்கினார்.

இவ்வளவு படித்தாலும் அடக்கமான சுபாவம் உடையவர் ராஜேன்பாபு. ஆஹா ஊ ஹூ என்று படாடோபம் செய்ய மாட்டார். “நிறைகுடம் தளும்பாது” என்று சொன்னால் நம்முடைய இந்தியக் குடியரசின் முதல் தலைவராகிய ராஜேன்பாபுவைப் பார்த்துத்தான் சொல்ல வேண்டும்.

# 6. பாரதியார்



**க**விச் சக்கரவர்த்தி சி. சுப்பிரமணிய பாரதியார் என்று விளக்கமாகச் சொல்லவேண்டியதில்லை; பாரதியார் என்றாலே எனக்கும் உங்களுக்கும் மற்றவர்களுக்கும் கவிச்சக்கரவர்த்தி **சி.சுப்பிரமணிய பாரதி**யாருடைய ஞாபகந்தான் உண்டாகும். சுப்ரமணியன் என்பது தகப்பனார் வைத்த பெயர். பாரதி என்பது அவருடைய பெருமையை அறிந்தவர்கள் வைத்த பெயர். பாரதி என்பதற்குக் கலைமகள் என்று அர்த்தம். கலைமகளே அவதாரம் செய்தது போன்ற கலைக் களஞ்சியமாக இருக்கிறவர்களுக்குப் பாரதி என்ற பட்டப் பெயர் கொடுப்பார்கள்.

நம்முடைய பாரதியாருக்கு முன்பு பல பாரதிகள்: கோபாலகிருஷ்ண பாரதி, அனந்த பாரதி என்பவர்களைப் போலப் பலர் இருந்திருக்கிறார்கள். அவருக்குப்பின்பும் பலபாரதிகள் உண்டு. ஆனால் பாரதியார் என்று சொன்ன மாத்திரத்திலே நமக்கெல்லாம் “செந்தமிழ் நாடென்னும் போதினிலே” என்ற பாட்டைப் பாடின நம்முடைய சுப்பிரமணிய பாரதியாரைத்தான் நினைக்கத் தோன்றுகிறது. காரணம் என்ன? அவர் இத்தனை பாரதிகளிலெல்லாம் பெரியவர்; வயசினால் அல்ல; கவிப் புலமையினால்.

இந்தியா இப்போது சுதந்தரம் அடைந்து விட்டது. இதற்கு முன் அடிமை வாழ்வில் நாம் இருந்தோம். அப்போது நமக்கு இருந்த சுதந்தரப் பசியை அவர் பாட்டாகப் பாடினார். பாரத தேசத்தில் அவரைப் போல மனத்தை உருக்கும்படி சுதந்தரப் பசியைப் பற்றிப் பாடினவர்கள் இல்லை. அது மட்டுமா? சுப்பிரமணிய பாரதியார் நமக்குச் சுதந்தரம் கிடைப்பதற்கு முன்பே இறந்துவிட்டார். ஆனால் சுதந்தரம் வந்த பிறகு பாடுவதற்குக்கூட அவர் கவிகளைப் பாடியிருக்கிறார். “ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே” என்ற பாட்டை நீங்கள் கேட்டிருப்பீர்களே! “ஆனந்த சுதந்தரம் அடைந்து விட்டோமென்று” என்ற பாட்டை முன்பே பாடிவிட்டார். இப்படிப் பின்னாலே வருவதை முன் கூட்டியே தெரிந்துகொண்டு சொல்பவர்களைத் தீர்க்கதரிசிகள் என்று சொல்வார்கள். நம்முடைய பாரதியார் சிறந்த தீர்க்கதரிசி. அதனால் தான் 1947-ஆம் வருஷம் சுதந்தரம் வந்தபோது, புதிய பாட்டைப் பாடிக்கொண்டு திண்டாடாமல் அற்புதமான பாட்டு ஒன்றை முன்பே பாடித் தந்திருக்கிறார். புதிய பாட்டை யாராவது பாடினால் தான் என்ன? அவர் பாட்டு மாதிரி இருக்க முடியுமா?

பாரதியார் எட்டையபுரத்தில் 1882-ஆம் வருஷம் நவம்பர் மாதம் பிறந்தார். அவருடைய தகப்பனார் சின்னசாமி ஐயர்; தாயார் லக்ஷ்மி அம்மாள். எட்டையபுரம் ஒரு சிறிய சமஸ்தானம். அதில் உள்ள ஜமீன்தாரை ஊர்க்காரர்கள் ராஜா என்று சொல்வார்கள். பெரிய ராஜாவாக இல்லாவிட்டாலும் குட்டி ராஜாவுக்கு ஏற்றபடி சின்னச் சின்ன ஆடம்பரமெல்லாம் இருக்கும். அரண்மனை கூட உண்டு. வெறும் பணக்காரராக இருந்தால் அவர் வீட்டை மாளிகை என்று சொல்லலாம்; பங்களா என்று சொல்லலாம்; வசிக்கிறவர் ராஜாவானால் அந்த மாளிகை அரண்மனை ஆகிவிடாதா?

சின்னசாமி ஐயருக்கு அரண்மனையில் உத்தியோகம். நல்ல அறிவாளி. கணக்கில் புலி. எந்த யந்திரமானாலும் ஒடித்துப் பார்ப்பார்; முடுக்கிச் சேர்த்துப் பார்ப்பார். துறு துறுத்த கை; துறு துறுத்த புத்தி. அவருக்குப் பிள்ளையாகப் பிறந்த சுப்பிரமணிய பாரதியாருக்கோ கணக்கென்றால் வேப்பங்காய். ஐந்து வயசிலேயே அம்மாவை இழந்தார் பாரதியார். அவர் தகப்பனார் தாயில்லாக் குழந்தையிடம் அதிக அன்போடிருந்தார். அவரே படிப்புச் சொல்லித்தந்தார். தாயுமானவர் பாட்டு, கம்பராமாயணம், திருக்குறள் எல்லாவற்றையும் சொல்லித்தந்தார். தமக்குப் பிரியமான கணக்கைக் கூடச் சொல்லித்தந்தார். பாரதியாருக்குக் கணக்கு வந்தால் தானே? கணக்குக்குரிய வாய்பாட்டிலே அவர் மனசு செல்லாது. ஆனால் கவிதைக்குரிய வாய்ப்பாட்டிலே ஊன்றி நிற்பார். "கணக்குப் போட வாடா" என்று அப்பா அழைப்பார்." கணக்கு -- பிணக்கு - வணக்கு - மணக்கு - ஆமணக்கு" என்று எதுகை வாய்ப்பாட்டை மனசுக்குள்ளே அடுக்குவார்.

கணக்கைச் சரியாகப் போடமாட்டாமல் விழிப்பார்.'' முழிக்கிற முழியைப் பார்'' என்று அப்பா சொல்வார். அதிலிருந்து மற்றோர் எதுகை வரிசை ஆரம்பமாகும்;''விழி - பழி - குழி - வழி - பிழி - சுழி'' என்று வாய்விட்டே சொல்லிவிடுவார். அவருடைய ஞாபகமெல்லாம் கவிபாடுவதற்கு ஏற்றபடி போய்க்கொண்டிருந்தது. கருத்து எங்கெங்கோ பறந்தது. வார்த்தை பாட்டுக்கேற்ற ஜோடனைகளைச் செய்தது.

கருத்தும் வார்த்தையும் இணைந்தன; பாட்டு உதயமாகி விட்டது. பதினொரு வயசு நடக்கும்போதே பாரதியார் கவிபாடத் தொடங்கிவிட்டார். அவர் காதில் விழும் வார்த்தைகளெல்லாம் அவருடைய கவிக்கு உபயோகப்படும். விளையாட்டாகக் கவிதை இயற்றுவார். சின்னப்பையன் கவி பாடுகிறான் என்றால் கேட்கிறவர்களுக்கு ஆச்சரியம் உண்டாகாதா? எல்லோரும் அந்தப் பையனைக் கவனிக்கத் தொடங்கினார்கள். இதைப் பாடு, அதைப் பாடு என்று கேட்டுத் தூண்டிவிட்டார்கள். பாரதியார் அவர்கள் கேட்கிறபடியெல்லாம் கவிபாடுவார். அப்படிப் பாடுவதில் அவர் பிரமாதமாகச் சிரமப்படுவதே இல்லை. அருவி ஓடுகிறதுஃ குயில் கூவுகிறது; மயில் ஆடுகிறது; சிங்கம் பாய்கிறது. இந்தக் காரியங்கள் பார்க்க நமக்கு ஆச்சரியமாக இருக்கின்றன. ஆனால் அவை அவைகளுக்கு இயற்கையானவை. அப்படித்தான் பாரதியாருக்கும் கவிபுனைவது என்பது உடன் பிறந்ததாகிவிட்டது.

'ராஜா' இருக்கிற சமஸ்தானத்தில் வித்துவான்கள் இருப்பார்கள். வேறு ஊர்களிலிருந்தும் அடிக்கடி பல புலவர்கள் வருவார்கள். அவர்கள் பாரதியாரின் கவிதா சக்தியை உணர்ந்து வியப்படைவார்கள்.

தமக்குச் சமானமாக அவரை வைத்துக் கொண்டு பேசுவார்கள். அந்தச் சின்னப் பிள்ளையும் மேலும் மேலும் அதிசயப்படும்படியாகக் கவிகளைப் பாடிவந்தார்.

அந்த ஊரில் இருந்தவர்களுக்கு ஒரு யோசனை தோன்றியது. “இந்த இளம்பிள்ளை இவ்வளவு அருமையாகப் பாடுகிறானே, இவனுக்கு ஏதாவது பட்டம் அளிக்கவேண்டும்” என்று நினைத்தார்கள். படித்த வித்துவான்களும், பாட்டைக் கேட்டு மகிழ்ந்து பாராட்டும் அன்பர்களும் சேர்ந்து ஒரு பெரிய சபை கூட்டினார்கள். அந்தச் சபையில் பாரதி என்ற பட்டத்தைச் சுப்பிரமணியனுக்குச் சூட்டினார்கள்.

பாரதியார் அதிகமாகப் படிக்கமாட்டார். கொஞ்சமாகப் படித்தாலும் படித்ததை மறக்கமாட்டார். ஆகையால் அவர் பள்ளிக்கூடத்தில் ஒவ்வொரு வகுப்பிலும் தேர்ச்சி பெற்று வந்தார். எட்டையபுரத்தில் சின்ன வயசில் படித்தார். பிறகு திருநெல்வேலியில் உள்ள ஹிந்து கலாசாலையில் சேர்ந்து படித்தார். ஐந்தாம் பாரம் வரையில் அங்கே படித்தார். மாணாக்கராக இருந்தாலும் அவர் பாரதியாரே அல்லவா? ஆகவே அவர் கவி பாடிக்கொண்டே இருந்தார்.

காந்திமதிநாத பிள்ளை என்ற ஒரு கனவான் பாரதியாருக்கு இருந்த புகழைக் கண்டு சகிக்கவில்லை. “சின்னப் பிள்ளையாண்டான்; இவனைப் போய்க் கவியென்றும் பாரதியென்றும் உச்சாணிக்கொம்பில் தூக்கி வைக்கிறார்களே!” என்பது அவருடைய எண்ணம். ஒரு நாள் பல அறிஞர்கள் கூடியிருந்த இடத்தில் காந்திமதிநாத பிள்ளையும், பாரதியாரும் சந்தித்தார்கள். பாரதியாரை அவமானப்படுத்த வேண்டும் என்பது

காந்திமதிநாத பிள்ளையின் ஆசை. அவர் பாரதியாரைப் பார்த்து, "உம்மை எல்லோரும் கவிஞர் என்று சொல்கிறார்களே. நான் கடைசி அடி தருகிறேன். அதை வைத்து ஒரு வெண்பாப் பாடுவீரா?" என்று கேட்டார். பாரதியார் ஆகட்டும் என்று ஒப்புக்கொண்டார். காந்திமதிநாத பிள்ளை குறும்புத்தனமாக, "அப்படியானால், பாரதி சின்னப் பயல் என்பதைக் கடைசி அடியாக வைத்துப்பாடும்" என்றார். பாடமாட்டார் என்று அவர் நினைத்தார். பாட முடியாமல் விழித்தால், "பாரதி சின்னப் பயல்; இவனைப்போய்ப் பிரமாதப்படுத்துகிறீர்களே!" என்று சொல்லலாமென்று அவருக்கு ஆசை. பாடிவிட்டால் தான் என்ன? "பார்த்தீர்களா? இவரே தம்மைச் சின்னப் பயல் என்று பாடிக்கொண்டார். இவரைப் பெரியவராகச் சொல்லலாமா?" என்று வாதம் பேசலாம் அல்லவா?

இந்தக் கெட்ட எண்ணம் பலிக்கவில்லை. பாரதியார் அவ்வளவு லேசானவரா? காந்திமதிநாத பிள்ளையின் சின்னப் புத்தி பாரதியாருக்குத் தெரிந்துவிட்டது. 'இத்தனை பேருக்கு நடுவில் நம்மைச் சின்னப் பயல் என்று சொல்லிவிட்டதால், மகிழ்ச்சி அடைகிறார் இந்த மனுஷர். இவருக்குச் சரியானபடி பதில் கொடுக்கவேண்டும்' என்று அந்தச் சிங்கக்குட்டி நினைத்தது. பாட்டு வந்துவிட்டது. 'பாரதி சின்னப்பயல்' என்ற ஈற்றடியை வைத்து ஒரு வெண்பாவைப் பாடிவிட்டார் பாரதியார்.

"............... காந்திமதி நாதனைப் பாரதி சின்னப் பயல்" என்பது பாட்டின் முடிவு. இதைக் கேட்டுப் பக்கத்தில் இருந்தவர்களெல்லாம் ஆச்சரியப்பட்டுப் போனார்கள். பிள்ளையவர்கள், பாரதியைச் சின்னப்பயல் என்று சொன்னார்.

பாரதியாரோ 'பிள்ளைவா'ளையே சின்னப்பயலாக்கிவிட்டார்: 'காந்திமதி நாதனைப் பார், அதிசின்னப் பயல்' என்று பிரித்து அர்த்தம் செய்யும் படி பாடினார். பிள்ளைவாள், பாரதியாரைச் சின்னப் பயல் என்று மாத்திரம் சொன்னார். அந்த இளங்கவியோ அப்படிச் சொன்னவரை அதி சின்னப்பயல், மிகவும் சின்னப் பயல் ஆக்கிவிட்டார். சிறுபிள்ளை அழகாகப் பாடுவதைக் கேட்டுச் சந்தோஷப் படாமல் பொறாமைப்பட்ட அந்த மனிதர் சின்னப் புத்தி படைத்தவர். அவரைப் பெரிய மனிதர் என்று எப்படிச் சொல்லலாம்? 'அதி சின்னப்பயல்' என்று பாரதியார் சொன்னது சரி.

இந்தச் சமாசாரம் ஊர் முழுவதும் பரவிவிட்டது. பாரதியாரின் புகழ் பின்னும் உயர்ந்துவிட்டது. ஒரு நாள் தமிழ் வகுப்பில் பாடம் நடந்து கொண்டிருந்தது. தமிழ் வாத்தியார் பாரதியாரை ஏதோ ஒரு கேள்வி கேட்டார். பாரதியார் தக்க விடை சொல்லவில்லை. சும்மா இருந்தார். "என்னப்பா, உன்னைப் பற்றி ஊரிலெல்லாம் பிரமாதமாகச் சொல்கிறார்கள். காளமேகம் போல் கவியைப் பொழிவதாகப் பாராட்டுகிறார்கள். அந்தக் காளமேகம் இப்போது ஒன்றும் பேசாமல் சும்மா இருக்கிறதே!" என்று கிண்டலாகக் கேட்டார் வாத்தியார். பாடத்தில் கேட்ட கேள்விக்குப் பாரதியார் பதில் சொல்லவில்லை. ஆனால் கிண்டலாக வாத்தியார் கேட்ட இந்தக் கேள்விக்குப் பதில் உடனே வந்துவிட்டது.

"வாத்தியார் நினைக்கிறபோதெல்லாம் மேகம் மழை பொழியுமா? மேகம் ஒருவருக்கு அடங்கி அவர் விருப்பப்படி மழை பொழிவதில்லையே! இந்த விஷயம் ஐயாவுக்குத் தெரியாதா?" என்றார் பாரதியார். பையன்கள் எல்லாம் சிரித்தார்கள்.

பாரதியாருக்கு ஓர் அத்தை இருந்தாள். அவளுடைய கணவர் காசியில் வேலையாக இருந்தார். பாரதியார் அங்கே போய்ச் சில வருஷங்கள் படித்தார். வடமொழி, ஹிந்தி ஆகிய பாஷைகளில் அவர் அறிவு பெற்றார். மறுபடி 1901-ஆம் வருஷம் எட்டையபுரம் வந்து அப்பாவைப் போல அரண்மனை உத்தியோகம் பார்க்கத் தொடங்கினார். எட்டையபுரம் ராஜாவுக்கு அவரிடத்தில் அதிகப் பிரியம். ஆனாலும் பாரதியார் அந்த ஊரிலே இருக்க விரும்பவில்லை. மதுரைக்கு வந்து சிலகாலம் தமிழாசிரியராக இருந்தார். அந்த வேலையும் அவருக்குப் பிடிக்கவில்லை. சென்னைக்கு வந்து ‘சுதேச மித்திரன்’ பத்திரிகையில் உதவி ஆசிரியராக இருந்தார். பிறகு ‘இந்தியா’ என்று ஒரு பத்திரிகையைத் தாமே நடத்தத் தொடங்கினார். அப்போது அவருக்கு 25 வயசு. அவ்வளவு சின்ன வயசில் அரசியல் ஞானமும் கவிதா சக்தியும் பெற்றுப் பத்திரிகாசிரியராக விளங்கினவர்கள் உலகிலேயே மிகச்சிலர்.

இந்தியாவின் அடிமை வாழ்வைப் போக்க வேண்டுமென்ற கிளர்ச்சி அப்போது ஏற்பட்டிருந்தது. திலகர் சுயராஜ்யம் வேண்டும் என்பதைப் பிரசாரம் செய்தார். பாரதியாரிடம் தீவிரமான தேசபக்தி முளைத்து வளர்ந்தது. பல கவிதைகளைப் புனைந்தார். சுடச்சுட எழுதினார். அவருடைய எழுத்து வழவழவென்று இராது. வீரம் கொப்புளிக்கும். அரசாங்கத்தார் அந்தப் பத்திரிகைக்குத் தடை போட்டார்கள். தம்மையும் சிறையிலிடுவார்கள் என்று எண்ணிப் பாரதியார் புதுச்சேரிக்குப் போய்விட்டார்.

புதுச்சேரி பிரெஞ்சுக்காரர்களுடையது. பிரிட்டிஷ் அரசாங்கத்தின் வெறுப்புக்கு ஆளான பல தேசபக்தர்கள் புதுச்சேரியில் இருந்தார்கள். அரவிந்தர், வ.வே.சு.ஐயரைப் போன்ற தேசபக்தர்களோடு பாரதியாரும் போய்ச் சேர்ந்துகொண்டார். புதுச்சேரியில் சில காலம் 'இந்தியா'ப் பத்திரிகையை நடத்தி வந்தார். பிறகு அது நின்று போயிற்று. அற்புதமான கவிதைகளைப் பாரதியார் புதுச்சேரியில் வாழ்ந்தபோது பாடினார்.

1918-ஆம் வருஷம் பாரதியார் மறுபடியும் சென்னைக்கு வந்து சுதேசமித்திரனில் வேலை பார்த்தார். 1921 செப்டம்பர் மாதம் 11-ஆம் தேதி பாரதியார் உலக வாழ்வைப் பிரிந்தார்.

பாரதியார் 39-வருஷங்கள் வாழ்ந்தார். அதற்குள் அவர் செய்த காரியம் பல. அழகான கவிதைகளை, இதற்குமுன் இல்லாத சுவைகளையெல்லாம் காட்டும் இனிய கவிதைகளை, அவர் இயற்றியிருக்கிறார். சின்னக் குழந்தைகளுக்காக அவர் பாடிய 'பாப்பா பாட்டு' மிகவும் நல்ல பாட்டு. குழந்தைகளெல்லோரும் படித்துப் பாடம் பண்ணிப் பாடவேண்டிய பாட்டு.

# 7. மௌலானா ஆஸாத்



மகாத்மா காந்தி எல்லா உயிர்களிடத்திலும் அன்பாக இருந்தார். எல்லா ஜனங்களிடத்திலும் அன்பாக இருந்தார். ஆனாலும் அவருக்குச் சில பேரிடத்தில் அதிக அன்பும் மதிப்பும் உண்டாயின. அவர்களோடு அதிகமாகப் பழகினார். அப்படிப்பட்டவர்கள் சில பேராவது உங்களுக்குத் தெரியும். உங்களைக் கேட்டால் உடனே ஜவஹர்லால் நேரு, ராஜாஜி என்று வரிசையாகச் சொல்ல ஆரம்பித்து விடுவீர்கள். அந்த வரிசையில் நிச்சயமாக மௌலானா அபுல்கலாம் ஆஸாத்தும் ஒருவராக இருப்பார்.

இப்போது அவர் பாரத நாட்டின் கல்வி மந்திரியாக இருப்பது உங்களுக்குத் தெரியுமே! கல்வி கற்கும் இளம் பருவத்தில் உள்ள நீங்கள் கல்வி மந்திரியைக் குறித்து அதிகமாகத் தெரிந்துகொள்வது நல்லதுதானே?

இப்போது மௌலானா ஆஸாத்தைப் பார்த்தால் மிகவும் சாதுவாகத் தோன்றுகிறார். இவர் பெரிய புரட்சிக்காரர். பயங்கரமான புரட்சிக்காரர் அல்ல. இளமையிலேயே அதாவது மகாத்மா காந்தி சுதந்தரப் போராட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்பே இவருக்கும் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கும் ஆகாது. பிரிட்டிஷ்காரர்கள் இவரை ஆபத்தான மனிதர் என்று நினைத்துக்கொண்டிருந்தார்கள்.

அபுல்கலாம் என்பது இவருடைய பெயர். மௌலானா என்றால் தலைவர் என்று அர்த்தம். பொதுஜனங்களுக்கு இவரிடம் மிகவும் அன்பு ஏற்பட்டது. இவரைத் தம்முடைய தலைவர் என்று மதிப்பு வைத்துப் பாராட்டினார்கள். அவர்கள் அளித்த பட்டம் அது. ஆஸாத் என்றால் சுதந்தரம் என்று அர்த்தம். இவர் சின்ன வயசிலேயே கவிதையும் கட்டுரையும் எழுதி வந்தார். அப்போது தம்முடைய பெயரைப் போடாமல் ‘ஆஸாத்’ என்ற புனைபெயரோடு எழுதி வந்தார். அது பிறகு இவருடைய சொந்தப் பெயரோடு ஒட்டிக்கொண்டது.

மௌலானா அபுல் கலாம் ஆஸாத்தின் தகப்பனார் முகம்மத் கைருதீன் என்பவர். அவர் ஒரு பெரிய படிப்பாளி. இஸ்லாம் மதச் சம்பந்தமாகப் பல புத்தகங்களை எழுதியிருக்கிறார். அவர் மதகுருவாக இருந்தார். அவருக்கு ஆயிரக்கணக்கான சிஷ்யர்கள்

உண்டு. அவருடைய முன்னோர்கள் கூடப் பெரிய கல்விமான்களாக இருந்தார்கள்.

முகம்மத் கைருதீன் டில்லியில் வாழ்ந்து வந்தார். 1857-ஆம் வருஷம் இந்தியாவில் ஒரு சுதந்தரப் போர் நடந்தது. பிரிட்டிஷாருடைய படையில் இருந்த இந்தியப் படைவீரர்கள் அந்தப் போரை நடத்தினர். அதை வெள்ளைக்காரர்கள், “சிப்பாய்க் கலகம்” என்று சொல்வார்கள். புரட்சிக்காரர்களையெல்லாம் அப்போது பிரிட்டிஷார் சிறிதும் இரக்கம் இல்லாமல் கொன்றனர்; அவர்கள் வீடுகளைக் கொளுத்தினர். டில்லியிலும் இத்தகைய அக்கிரமங்கள் நடந்தன. அக்காலத்தில் ஆஸாத்தின் தந்தையார் அங்கே இருக்க மனம் இன்றி அரேபியாவுக்குச் சென்றார். முகம்மதியர்களின் புனித ஸ்தலமாகிய மெக்காவில் தங்கி வாழ்ந்து வந்தார்.

மத நூல்களில் நிபுணராகிய அவருக்கு மெக்காவில், பல மாணாக்கர்கள் சேர்ந்தனர். ஒரு பெரிய படிப்பாளியின் பெண்ணை அங்கேயே கல்யாணம் செய்துகொண்டார். அடிக்கடி இந்தியாவிலிருந்து முஸ்லிம்கள் மெக்காவுக்கு யாத்திரையாகப் போவதுண்டு. அப்படிப் போனவர்களில் கைருதீனுடைய சிஷ்யர்கள் பலர். அவர்கள் தம்முடைய ஆசிரியரை அணுகி, “நீங்கள் மறுபடியும் இந்தியாவுக்கே வந்துவிட வேண்டும்” என்று வேண்டிக்கொண்டார்கள்.

1888-ஆம்வருஷம் அபுல்கலாம் ஆஸாத் மெக்காவில் பிறந்தார். 1898-ஆம் வருஷம் இவர் தகப்பனார், தம் மாணாக்கர்கள் விருப்பத்தை நிறைவேற்றினார்; அதாவது தம் குடும்பத்துடன் இந்தியாவுக்கே வந்துவிட்டார். கல்கத்தாவில் வசிக்கலானார்.

அபுல்கலாம் ஆஸாத்தின் தந்தையாருக்கு வெள்ளைக்காரர் நாகரிகத்தைக் கண்டால் அருவருப்பு ஏற்பட்டது. இங்கிலீஷ் பாஷையில் கூட அவருக்கு வெறுப்புத்தான். அவர் வீட்டில் எல்லாம் பழைய பாணியில் தான் இருக்கும். கீழே பாயை விரித்துத்தான் உட்காருவார். மேஜை நாற்காலி இல்லை. ராஜா வந்தாலும் சரி, மந்திரி வந்தாலும் சரி; அந்தப் பாயில்தான் உட்கார வேண்டும். தம் பிள்ளையை அவர் இங்கிலீஷ் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பவில்லை. தாமே அரபு பாஷையையும் பர்ஸிய மொழியையும் சொல்லிக் கொடுத்தார். வேறு வாத்தியார்களையும் கொண்டு கற்பிக்கச் செய்தார்.

ஆஸாத்தின் தாயார் அரேபியாவில் பிறந்தவர். அவர் தாய் மொழி அரபு பாஷை. தகப்பனாரோ இந்தியர். அவர் தாய்மொழி உருது. ஆகவே இரண்டு பாஷைகளிலும் ஆஸாத்துக்கு அறிவு இயற்கையாகவே அதிகமாக இருந்தது. அதோடு அவருடைய கூர்மையான அறிவு எத்தகைய படிப்பானாலும் வெகு சீக்கிரத்தில் பற்றிக் கொண்டது. அரபு பாஷையிலேயே கணிதம், தர்க்கம், பூகோளம், சரித்திரம் முதலிய எல்லாப் பாடங்களையும் இவர் கற்றார். இவர் கற்ற கல்வித்திட்டம் பழமையானது. சாமானிய மாணாக்கனாக இருந்தால், அந்தத் திட்டத்தின் படி கற்றுத் தேர்ச்சி பெற 14 வருஷங்கள் ஆகும். கெட்டிக்காரப் பையனாக இருந்தால் 10 வருஷங்களில் படிக்கலாம். ஆனால் ஆஸாத் படித்த வேகம் இந்தக் கணக்கில் அடங்கவே இல்லை. அதைச் சொன்னால் நீங்கள் நம்பக்கூட மாட்டீர்கள். நாலே வருஷத்தில் அந்தப் படிப்பை இவர் படித்துவிட்டார். ‘அது எப்படி!’ என்று நீங்கள் பிரமிக்கலாம். சின்ன வயசில் மெக்காவில்

இருந்தபோதே இவர் அரபு பாஷையைப் படித்தார். பல விஷயங்களைத் தெரிந்துகொண்டார். இங்கே வந்தவுடன் எல்லாம் சுலபமாக இருந்தன. அதோடு இவருடைய அறிவும் கூர்மையாக இருந்தது. அதுதான் காரணம்.

இதுமட்டும் அல்ல. நன்றாகப் படிக்கிறவராக இருந்தால், மற்றவருக்குப் பாடமும் சொல்வார்கள். தாம் பாடம் கேட்பதோடு கூடச்சிலருக்கு ஆஸாத் அந்தச் சிறு வயசிலேயே ஆசிரியராகவும் இருந்தார். இவருக்கு அப்போது வயசு பதினாலு. அவரிடம் பாடம் கேட்டவர்களில் தாடிக்காரப் பட்டாணியர் ஒருவர். அவருக்கு ஆஸாத்தின் அப்பா வயசு இருக்கும். அவர் ஆஸாதுக்கு மாணாக்கர்! வயசான பிறகு மூளையில் விஷயம் சுலபத்தில் ஏறுமா? அந்த மாணாக்கர் கொஞ்சம் நிதானமான பேர்வழி. தர்க்கத்தில் ஒரு பகுதியை ஆஸாத் அந்தப் பட்டாணியருக்குச் சொல்லித் தந்துகொண்டிருந்தார். ஒரு விஷயத்தை விளக்கினார். அவருக்கு அது விளங்கவில்லை. பல உதாரணங்களைச் சொல்லித் தொண்டைத் தண்ணீர் போக விரிவாகச் சொன்னார். அப்போதும் அது அந்தத் தாடிக்கார மாணாக்கர் மூளையில் ஏறவே இல்லை. ஆஸாதுக்குக் கோபம் வந்து விட்டது. எவ்வளவு தடவைதான் சொல்லிக் கொடுப்பார் புத்தகத்தை அவர் மூஞ்சியில் எறிந்தார். "ஓய்! உமக்கு மூளை களிமண்ணால் செய்திருக்கிறது. அதில் இந்தப் படிப்பெல்லாம் ஏறாது. பேசாமல் வீட்டுக்குப் போய் மாட்டோடு மாடாக இருந்து புல்லைத் தின்னும். அதற்குத்தான் லாயக்கு" என்று சொல்லி அனுப்பிவிட்டார். பாவம்! அந்த மனிதர் வாயையே திறக்கவில்லை. பதில் பேசமாத்திரம் அல்ல; சாப்பிட வாயைத் திறக்க வேண்டுமே!

அதைக் கூட அவர் செய்யவில்லை. ‘நாம் இப்படி இருக்கிறோமே!’ என்று வருந்தி அன்று சாப்பிடாமல் பட்டினியாகவே இருந்தார்.

இந்தச் சமாசாரம் ஆஸாதின் அப்பாவுக்குத் தெரிந்தது. தம் பிள்ளையின் மேல் அவருக்குக் கட்டுக்கு அடங்காத கோபம் வந்து விட்டது. “உனக்குக் கொஞ்சங்கூடப் புத்தி இல்லை. உன் வயசென்ன? அவர் வயசென்ன? அந்த மனிதர் மனசைப் புண்படுத்தி விட்டாயே! என் வயசான அவரிடம் மரியாதை இல்லாமல் நடக்கலாமா? அவர் பட்டினி கிடக்கிறாரே! போய் முதலில் அவரிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு, அவரைச் சாப்பிடும்படி செய்து விட்டு வா” என்று கடிந்துகொண்டார்.

ஆஸாத் பட்டாணியர் வீட்டுக்குப் போய்த் தம் வருத்தத்தைத் தெரிவித்துக்கொண்டார். அவரோ, “நீங்கள் எனக்கு வாத்தியார். என்னைக் கண்டிக்கும் உரிமை உங்களுக்கு உண்டு. நீங்கள் என்னிடம் மன்னிப்பைக் கேட்க நியாயமே இல்லை. என் முட்டாள் தனத்தை நீங்கள் எடுத்துக் காட்டுவது எனக்குத்தானே நல்லது?” என்று சொன்னார். கடைசியில் ஆஸாத் அவரைக் கெஞ்சிச்சாப்பிடச் செய்துவிட்டுத்தான் வீடு திரும்பினார்.

மௌலானா ஆஸாத் 1905-ஆம் வருஷம் முதல் 1907-ஆம் வருஷம் வரையில் எகிப்தில் உள்ள கெயிரோ சர்வகலாசாலையில் படித்துப் பட்டம் பெற்றார். இளமையிலே இங்கிலீஷ் படியாமற் போனாலும் பிற்காலத்தில் தாமாகவே படித்துக் கொண்டார். மிகவும் சிறந்த ஆங்கில இலக்கியங்களைப் படித்து உணர்ந்தார். இவரிடம் இப்போது இருக்கும் ஆங்கில நூல்கள், இந்தியாவில் வெகு சிலரிடமே இருக்கக் கூடும்.


www.worldtamilacademy.com

ஆஸாத் மிகவும் சிறிய வயசிலேயே கவிதை எழுதத் தெரிந்து கொண்டார். எவ்வளவு கடினமான விஷயத்தைக் கொடுத்தாலும் அதைப் பாட்டாகப் பாடிவிடுவார். 14 வயசு நடந்துகொண்டிருந்தபோதே இவர் கவிதைக்காகவே 'நெரேஞ் ஆலம்' என்ற உருதுப் பத்திரிகையை நடத்திவந்தார். இளங்கவிஞர்களெல்லாம் அதில் கவிதைகளை எழுதினர்.

அவ்வப்போது கவி சம்மேளனம் நடைபெறும். அப்போது பல கவிஞர்கள் கூடுவார்கள். கரடுமுரடான எதுகைகளை வைத்துப்பாடும்படி அவர்களுக்குச் சொல்வார்கள். இன்ன இன்ன வார்த்தைகளை இப்படி இப்படி வைத்துப் பாடவேண்டும் என்பார்கள். அப்படிப் பாடியவர்களுக்குள் கெட்டிக்காரருக்குப் பரிசு வழங்குவார்கள்.

இந்தச் சம்மேளனங்களுக்கு ஆஸாத் போவார். அவர்கள் போடும் நிபந்தனைகளின்படி பாட்டுப் பாடிக் காட்டுவார்; பரிசைத் தட்டிக்கொண்டு போவார். சபையில் உள்ளவர்கள், "இந்தச் சிறுபையன் இவ்வளவு கடினமான பாடல்களைப் பாடுகிறானே; இவனால் முடியுமா?" என்று சந்தேகித்தார்கள். நாதிர்கான் என்ற பெரியகவி ஒருவர் ஆஸாத் சொந்தமாகப் பாடுவார் என்று நம்பவே இல்லை. "யாரோ, மறைவாக இருந்து சொல்லிக் கொடுக்கிறார்கள். இந்தப் பிள்ளையாண்டானுக்குப் பெருமை உண்டாகவேண்டும் என்று செய்கிற வேலை இது. இல்லாவிட்டால், இந்தப் பையனாவது! இந்தப் பாட்டைப் பாடவாவது! எவ்வளவு நாளைக்கு இந்தத் திருட்டு நடைபெறும்? நான் ஒருநாள் கண்டுபிடித்துவிடுவேன்' என்று மனசுக்குள் எண்ணியிருந்தார். ஆம்; அவர் கண்டுபிடித்துவிட்டார். எப்படித் தெரியுமா? அந்த வேடிக்கையைக் கேளுங்கள்:

ஒரு நாள் ஆஸாத் ஒரு புத்தகக் கடையில் புத்தகங்களைப் புரட்டிப் பார்த்துக்கொண்டிருந்தார். புத்தகப் பைத்தியம் அல்லவா? அப்போது அந்த வழியாக நாதிர்கான் என்ற கவிஞர் போனார். அவர் ஆஸாத்தைப் பார்த்தார். இந்தப் பையன் வண்டவாளத்தை இப்போது தெரிந்துகொள்ளலாம். சரியானபடி சிக்கவைத்து இவனுடைய திருட்டுத்தனத்தை வெளிப்படுத்தலாம்' என்று எண்ணி அந்தக் கடைக்குள் போனார். "ஏ பையா; கவி சம்மேளனத்தில் நீ பல கவிகளைச் சொல்வதைக் கேட்டிருக்கிறேன். அவைகளெல்லாம் நீயே இயற்றியவை என்று எப்படிச் சொல்வது? நீ உண்மையிலேயே கவி இயற்றும் சாமர்த்தியம் உடையவனாக இருந்தால், இப்போது அதைக் காட்டு பார்க்கலாம்! 'யாத்தஹோ, ஷாத்தஹோ, அபாத்தஹோ'- இவைகளை வைத்துப் பாடுபார்க்கலாம்" என்றார். பையன் பல்லைக் காட்டிப் பரக்க விழிப்பான் என்று அவர் எதிர்பார்த்தார்.

ஆஸாத் அதைக் கேட்டார். அவருக்குச் சிறிது கோபம் வந்தது. கடைவீதியில் நாலு பேருக்கு முன்னிலையில் இப்படிக் கேட்கிறாரே என்று ரோசமாக இருந்தது. அந்த ரோசம் அவருடைய சக்தியைத் தூண்டிவிட்டது. சடசடவென்று கவிதையைச் சொல்ல ஆரம்பித்தார். நாதிர்கான் காதில் அவை விழுந்தன. அவருக்கு ஒன்றுமே தோன்றவில்லை. பிரமித்துப் போனார். "ஹா ஹா ஹா!" என்று கூத்தாடினார். அவ்வளவு பேருக்கு நடுவில் தம்முடைய அறியாமையை ஒப்புக்கொண்டார். "உண்மையில் நீ சிறந்த கவி அப்பா! நான் இதுவரையில் நம்பவில்லை. எல்லாம் ஏமாற்றமென்று நினைத்தேன். நீ மகா கெட்டிக்காரன். எத்தனையோ பேர்

கவி பாடுகிறார்கள். ஆனாலும் உனக்குச் சமானமாகச் சிலரே இருக்கக்கூடும். நீ தீர்க்காயுளாக வாழவேண்டும்" என்று ஆசீர்வாதம் செய்தார்.

பதினாலு பதினைந்து வயசிலே 'லிஸானஸ் ஸிதிக்' என்ற பத்திரிகை ஒன்றை இவர் நடத்திவந்தார். 'உண்மை வாக்கு' என்பது அதன் பொருள். அதில் எல்லாவிதமான விஷயங்களையும் பற்றி அலசிவந்தார். அதன் ஆசிரியர் யாரோ நிரம்பப் படித்த பெரியவர் என்று பலர் எண்ணிக்கொண்டிருந்தார்கள். க்வாஜா அல்டாப் ஹுஸேன் ஹாலி என்ற பெரிய உருதுப் புலவர் ஒருவர் இருந்தார். அவர் ஸர் லையத் அகமத்கான் என்பவருடைய சரித்திரத்தைப் புத்தக உருவி எழுதினார். அதைப்பற்றி ஒரு விரிவான மதிப்புரையை ஆஸாத் தம் பத்திரிகையில் வெளியிட்டார். சிறிதும் ஒளிவு மறைவில்லாமல் நூலிலுள்ள குற்றங்களையும் எடுத்துக் காட்டி அந்த மதிப்புரையை எழுதியிருந்தார். அதைப் பலர் படித்துப் பார்த்தார்கள். பலர் பாராட்டினார்கள்; பலர் குறைகூறினார்கள். பலமுடைய கவனத்தை அது கவர்ந்ததானாலும் அவர்களுக்கு ஆஸாத் இன்னாரென்றே தெரியாது; இவர் பதினாறு வயசுப் பையன் என்பது சிறிதும் தெரியாது.

லாகூரில் ஒரு பெரிய சங்கம் இருந்தது. அதன் ஆண்டுவிழாவில் பேசுவதற்கு ஆஸாத்தை அழைத்தார்கள். இவரை நேரில் அறியாவிட்டாலும் 'ஸானஸ் ஸிதிக்' என்ற பத்திரிகையின் ஆசிரியர் என்று புகழ் ஏற்பட்டிருந்தது. ஆஸாத்துக்குச் சிறிய கூட்டங்களில் பேசும் பழக்கம் இருந்தது. ஆனாலும் லாகூரில் இருந்த சபையைப் போன்ற சபையில் பேசியதில்லை.

சபையின் ஆண்டு விழாவுக்கு ஆஸாத் சென்றார். 1904-ஆம் வருஷம். இவர் பேசவேண்டிய விஷயமோ வயசில் முதிர்ந்த பெரியவர்கள் பேசுவதற்குரியது. "சமயத்துக்குப் பகுத்தறிவு ஆதாரம்" என்பதுதான் அந்த விஷயம். பெரிய சபைகவிஞர்களும் பேரறிஞர்களும் எழுத்தாளர்களும் கூடியிருந்தனர். பெரிய கவிஞராகிய இக்பால் கூட்டத்துக்கு வந்திருந்தார். எந்தப் புத்தகத்துக்குத் தயை தாட்சிண்யமின்றி ஆஸாத் மதிப்புரை எழுதியிருந்தாரோ அந்தப் புத்தகத்தின் ஆசிரியராகிய ஹுஸேன் ஹாலியும் வந்திருந்தார். அவர் பெரிய கவிஞர்.

பிரசங்கம் செய்வதற்குமுன் சங்கத்தினர் அவரைக் கூட்டத்துக்கு அறிமுகம் செய்துவைத்தனர். 'இந்தப் பிள்ளையாண்டானா பேசப்போகிறான்? அதுவும் இந்த நுணுக்கமான விஷயத்தைப் பற்றியா!' என்று ஆச்சரியப்பட்டார்கள். ஹுஸேன் ஹாலி, பத்திரிகாசிரியராகிய மௌலானா அபுல்கலாம் ஆஸாத் வர வில்லைபோல் இருக்கிறது. இவர் அவருடைய பிள்ளை போலும்!' என்று நினைத்திருந்தார். ஆனால் அவரோ அந்தப் பத்திரிகையின் ஆசிரியர் என்பதைத் தெரிந்துகொண்டபோது அவருக்கு உண்டான ஆச்சரியத்துக்கு எல்லை இல்லை. "இந்தச் சிறுவனா தன் புத்தகத்துக்கு அவ்வளவு விரிவான மதிப்புரை எழுதினான்" என்று இவரைப் பார்த்துப் பார்த்து வியந்தார். ஆஸாத் பேச ஆரம்பித்தார். அந்த நுணுக்கமான விஷயத்தைப் பேச எவ்வகையிலும் தகுதியுள்ளவர் என்பதைக் காட்டினார். கொரானிலும் மற்ற மத நூல்களிலும் இவருக்கு எவ்வளவு ஆழமான அறிவு இருக்கிறதென்பதைக் கூட்டத்தினர் அறிந்து ஆச்சரியப்பட்டனர். ஹுஸேன் ஹாலி அந்தப் பிரசங்கத்தைக் கேட்டு

அப்படியே சொக்கிப் போய்விட்டார். “சின்ன உடம்பில் பெரிய மூளை” என்று பாராட்டினார்.

வரவர ஆஸாத்தின் அறிவு வளர்ந்து விரிவடைந்தது. நம் நாடு அடிமைப்பட்டுக் கிடப்பதை உணரலானார். பிரிட்டிஷ் அரசாங்கத்தின் அக்கிரமங்களைக் கண்டு இவருக்குக் கோபம் கோபமாக வந்தது. 1912-ஆம் வருஷம் ‘ஆல் ஹிலால்’ என்ற பத்திரிக்கையைத் தொடங்கினார். மிகவும் காரசாரமாக எழுதிவந்தார். அந்த வாரப்பத்திரிகைக்கு வரவர ஆதரவு அதிகமாயிற்று. முதலாவது யுத்தம் ஆரம்பித்த காலத்தில் இவரைப் பாதுகாப்பில் வைத்தார்கள். 1920-ஆம் வருஷம் வரையில் இவர் சிறையில் இருந்தார். பிறகு விடுதலை பெற்றார்.

பிறகு மகாத்மா காந்தியுடன் சேர்ந்து இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டார். காங்கிரஸ் மகாசபையின் தலைவராக இரண்டு தடவை இருந்திருக்கிறார். இரண்டாவது உலகப்போர் நடந்து போது இவர். சிறைப்பட்டார். மகாத்மா காந்திக்கு இவரிடத்தில் தனி மதிப்பு இருந்தது.

இன்று ஆஸாத் இந்தியாவை அரசாட்சி செய்யும் தலைவர்களில் ஒருவர். மகாமேதாவி; பல நூல்களுக்கு ஆசிரியர். இஸ்லாம் மத சம்பந்தமான விஷயங்களில் இவர் பெரிய நிபுணர். சின்ன வயசிலேயே அறிவிலும் தேச பக்தியிலும் பழுத்திருந்த இவர் இன்று சுதந்தர பாரதத்தின் கல்வி மந்திரியாக இருப்பது பொருத்தமானது.

# விளையும் பயிர்



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com